

"லக்ஸ் டாய்லட் சோப்பின்
மிருதுவான பாதுகாப்பு முறையை
30 நாட்கள் கையாளுங்கள்"
என்கிறார்
யசோதரா கட்ஜு
LUX
TOILET SOAP
சினிமா நட்சத்திரங்கள் விரும்பும்
அழகையளிக்கும் சோப்!
LTS. 142-111-40 TM
LEVER BROTHERS (INDIA) LIMITED

குழந்தைக்கு ஆரம்பத்திலேயே நல்லஉணவைக்கொடுங்கள்-

ஒரு குழந்தையை - சந்தோஷமும் ஆரோக்யமும் வாய்ந்த வாலிபப் பருவம் வரை வளர்க்க வேண்டியது உங்கள் பொறுப்பு: அவனுடைய ஆகாரம் சரியானதா என்று உறுதி செய்ய வேண்டியது உங்களது முக்கியமான காரியம். அதற்கு ஏற்றது-



லாக்டோஜன்

குழந்தையின் சிறிய உடலிற்குத் தேவையான புஷ்டிப் பதார்த்தங்கள் திட்டமாகச் சேர்க்கப்பட்ட குழந்தைகளுக்கான ஆகாரம் லாக்டோஜன். அது பரிசுத்தமானது. சத்துள்ள பால், வைத்திய முறைப்படி கட்டியாகவும், தாய்ப் பாலுக்கு ஈடுள்ளதாகவும் செய்யப்பட்டது. மிக சுலபமாக ஜீரணமாகக் கூடியது. இளம் குழந்தைகள் கூட, பிறந்ததிலிருந்தே லாக்டோஜன் ஆகாரத்தை உட்கொள்ளலாம்.



"தாய்மார்களுக்கு லாக்டோஜன் புத்தகம்", தாய்மார்களுக்கு வேண்டிய விதிகள் உள்ளன; "நெஸ்லேஸ்" த பெ. பெ. 180-சென்னைக்கு ஓர் அஞ்சலட்டை அனுப்பி, பெற்றுக்கொள்ளுங்கள்

கல்கி

பொருளடக்கம்

மலர் 5 இதழ் 50 | 1946 ஜூலை 21 | வியஜ ஆடி 6

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்களும், சம்பவங்களும் கற்பனையே.

1946-ம் வருஷத்துக் "கல்கி" சிறு கதைப் போட்டி

பரிசு ரூ. 1000

முதல் பரிசு ரூ. 500 ; ஐந்து பரிசுகள் ஒவ்வொன்றும் ரூ. 100

1. இந்தப் போட்டிக்கு அனுப்பும் கதைகள், தமிழ்நாட்டு மக்களின் வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்ட புதுக் கற்பனைகளாக இருக்க வேண்டும்.

2. கதையின் நீளம் "கல்கி"யின் ஐந்து பக்கம் முதல் பன்னிரண்டு பக்கத்துக்குள் அடங்குவதாயிருக்க வேண்டும்.

3. ஒரே ஆசிரியர் இரண்டு கதைகள் அனுப்பி வைக்கலாம். அதற்குமேல் அனுப்பக் கூடாது.

4. சென்ற 1945-ம் வருஷத்துப் போட்டிக்கு அனுப்பிப் பரிசு பெறாத கதைகளைத் திரும்பவும் அனுப்பக் கூடாது. அம்மாதிரி கதைகள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட மாட்டா.

5. 1946-ம் வருஷம் செப்டம்பர் 30-உக்குள் போட்டிக் கதைகள் "கல்கி" காரியாலயத்துக்கு வந்து சேர வேண்டும். கவரின்மேல் "சிறு கதைப் போட்டி" என்று குறிப்பிட வேண்டும்.

6. எல்லாவற்றிலும் சிறந்ததென்று பஞ்சாயத்தார் கருதுகிற கதைக்கு முதல் பரிசு ரூ. 500-ம், அடுத்தபடியான ஐந்து கதைகளுக்கு ஒவ்வொன்றுக்கு ரூ. 100 வீதமும் அளிக்கப்படும். பரிசு பெற்ற கதைகளின் 'காபிரைட்' உரிமை "கல்கி" காரியாலயத்தைச் சேர்ந்தது.

7. பரிசு பெறாத கதைகளில் பிரசுரத்துக்குத் தகுதியான கதைகள் பிரசுரத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும். அவற்றுக்கு ஆசிரியர் உசிதப்படி சன்மானம் வழங்கப்படும்.

8. முதற் பரிசு பெற எந்தக் கதையும் தகுதியற்றதென்று பஞ்சாயத்தார் கருதினால், பரிசுத் தொகை பஞ்சாயத்தாரின் உசிதப்போல் பிரித்துக் கொடுக்கப்படும்.

9. இந்தப்போட்டி சம்பந்தமான விதிகளை மாற்றவும் திருத்தவும் "கல்கி" ஆசிரியருக்கு உரிமை உண்டு.

10. சந்தேகம் ஏற்படும் எந்த விஷயத்திலும் "கல்கி" ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது.

மானேஜர் : "கல்கி", கீழ்ப்பாக்கம், சென்னை

கல்கி

மலர் 5 | தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | இதழ் 50

என்ன சேதி?

வாழ்த்துக்கள் வாபஸ்

சென்னை மாகாணத் தபால் தொழிலாளருக்கு நாம் சென்ற இதழில் அளித்த வாழ்த்துக்களை வெற்றிகரமாக வாபஸ் வாங்கிக் கொள்கிறோம்.

அவர்கள் வேலை நிறுத்தம் செய்வதில்லை என்று தீர்மானித்ததைக் குறித்து மகிழ்ச்சியுடன் வாழ்த்துக் கூறியிருந்தோம்.

ஆனால் வட இந்தியாவில் பல இடங்களிலும் தபால் இலாகா ஊழியர் வேலை நிறுத்தம் செய்திருக்கும் செய்திகள் வந்த பிறகு இந்த மாகாணத்திலும் முக்கிய நகரங்களில் தபால் ஊழியர் வேலை நிறுத்தம் செய்திருக்கிறார்கள்.

"ஊரோடு ஒத்து வாழ்" என்னும் முதுமொழிக்கு இணங்க அவர்கள் வட நாட்டிலுள்ள சகோதரத் தொழிலாளருடன் தங்களுடைய ஒற்றுமையை நிலைநாட்டியதைப் பாராட்டுகிறோம்.

அதன் காரணமாக நம்முடைய வேலைகளுக்கு ஏற்படும் சங்கடங்களைப் பொறுத்துக் கொள்ளவும் சித்தமாயிருக்கிறோம்.

தபால் இலாகா தொழிலாளரின் குறைகளையும் கோரிக்கைகளையும் நாம் அறிந்து கொள்ளும் பொருட்டு விவரங்களை அனுப்பி வைத்திருக்கும் நேயர்களுக்கு நமது நன்றியைச் செலுத்துகிறோம்.

சமரச முயற்சிகள் பலிதமடைந்து கூடிய விரைவில் தபால்காரர் வேலை நிறுத்தம் நல்ல முறையில் முடிவடைய வேண்டும் என்று பிரார்த்திக்கிறோம்.

அற்ப விஷயம்!

நமது சட்ட மந்திரி கே. பாஷ்யம் ஒன்றை "அற்ப விஷயம்" என்று சொன்னால், அதற்கு அப்பீல் கிடையாது; அது அற்ப விஷயமாகத்தான் இருக்க வேண்டும். பக்கிங்காம்-கர்னாடிக் ஆலைத் தொழிலாளர் 14,000 பேர் வேலை நிறுத்தம் செய்திருக்கிறார்கள் அல்லவா? அந்த வேலை நிறுத்தத்துக்குக் காரணம் "மிகவும் அற்ப விஷயம்" என்று சட்ட மந்திரி சொல்லியிருக்கிறார். சென்ற 14உ மாலை சென்னை வண்ணாரப்பேட்டையில் அவர் செய்த பிரசங்கத்தில் அவ்விதம் அவர் கூறியதாக 15உ "ஹிந்து" பத்திரிகையில் வெளியாகியிருக்கிறது.

அற்ப விஷயந்தான்; ஆனால் அந்த அற்ப விஷயங் காரணமாக நேர்ந்திருக்கும் விபரீதங்கள் மிகப் பெரியவை.

வேலை நிறுத்தம் செய்த 14,000 தொழிலாளிகளும் நாற்பது தினங்கள் வருமானத்தை இழந்து மனைவி மக்களோடு பட்டினி கிடக்க வேண்டியதாயிற்று.

தினம் ஒன்றுக்கு 2½ லட்சம் கெஜம் துணி வீதம் ஒரு கோடி கெஜம் துணி உற்பத்தி நஷ்டமாகி விட்டது.

ஏராளமான நூல் உற்பத்தி தடைப்பட்டுக் கைத்தறிகாரர்களுக்கு நூல் சப்ளை குறையவும் துணிப் பஞ்சம் அதிகமாகவும் ஏதுவாகி விட்டது.

அதிசய விஷயம்!

இவ்வளவுக்கும் ஆஸ்பதமான அற்ப காரணத்தை ஆரம்பத்திலேயே நிவர்த்தி செய்யச் சென்னை மாகாணத்துப் பதின்மூன்று காங்கிரஸ் மந்திரிகளாலும் பதினாலு பார்லிமெண்டரி காரியதரிசிகளாலும் முடியவில்லையென்பது ஓர் அதிசயமான விஷயம் அல்லவா?

வேலை நிறுத்தம் ஆரம்பித்த மறுநாளே மந்திரிமார்கள் மேற்படி பக்கிங்காம் ஆலை முதலாளி மிஸ்டர் டவுன் துரையைக் கூப்பிட்டு, மேற்படி அற்ப காரணத்தை நிவர்த்தி செய்து வைத்து, 14,000 தொழிலாளிகளைத் திருப்தியுடன் வேலைக்குத் திரும்பச் செய்திருக்கலாம்.

மிஸ்டர் டவுன் துரையிடம் தங்களுடைய அதிகாரம் செல்லாது என்று பயமாயிருந்தால், தொழிலாளரின் கூட்டத்துக்குச் சென்று, "அப்பன்மார்களே! தயவு பண்ணி வேலைக்குப் போங்கள். பொது நன்மைக்காக, துணிப் பஞ்சத்தை முன்னிட்டு, உங்களுக்குக் கொஞ்சம் கஷ்டமாக இருந்தாலும் பொறுத்துக்கொண்டு இப்போதைக்கு வேலைக்குப் போங்கள். நாங்கள் மத்தியஸ்தரை நியமித்து நியா

யம் வழங்குகிறோம்!" என்று சொல்லி வேலைக்குப் போகச் செய்திருக்கலாம்.

மேற் சொன்ன இரண்டில் ஒன்றை மந்திரிமார்கள் ஆரம்பத்திலேயே செய்திருந்தால் எவ்வளவோ கஷ்டமும் நஷ்டமும் மிச்சமாகியிருக்கும்.

நாம் இதை எழுதும்போது பிரதம மந்திரியும் தொழில் மந்திரியும் சமரஸ முயற்சியில் இறங்கியிருக்கிறார்கள்.

இதன் பலனாக நல்ல முடிவு ஏற்பட்டு வேலை நிறுத்தம் தீர வேண்டுமென்று எல்லாரும் விரும்புவார்கள்.

ஆனால், ஒரு அற்ப விஷயம் காரணமாக இந்த மாகாணத்தில் ஒரு கோடி கெஜத்துக்கு மேல் துணி உற்பத்தி தடைப்பட்டது தடைப்பட்டதுதான்.

மதுவிலக்கு வழவழா

மேற்படி வண்ணாரப் பேட்டைப் பொதுக் கூட்டத்தில் மற்றொரு மந்திரி ஸ்ரீ பி. எஸ். குமாரசாமி ராஜாவும் பேசியிருக்கிறார். இவர் மது விலக்கைப் பற்றிப் பேசியிருக்கிறார். மதுவிலக்கைப் பற்றி வழ வழா முறையில் பேசியிருக்கிறார்.

மதுவிலக்கை மாகாணம் முழுவதிலும் ஒரே யடியாகக் கொண்டுவர முடியாதென்றும், கொஞ்சம் கொஞ்சமாகத்தான் கொண்டு வரவேண்டுமென்றும், அதற்குப் புதிய வரிகள் போடவேண்டியிருக்கும் என்றும் பயமுறுத்தியிருக்கிறார்.

மது விலக்கை ஒரே யடியாக மாகாணம் முழுவதிலும் கொண்டுவரலாம் என்றும், இந்த வருஷமே கொண்டு வரலாம் என்றும், அதற்குப் புதிய வரிகள் போட வேண்டாம் என்றும் நாம் சொல்கிறோம்.

மதுவிலக்குச் செய்வதற்கென்றே விதித்த விற்பனை வரி வருஷம் 6 கோடி ரூபாய் வருகிறதென்பதையும், அந்த வரி மூலம் ஏற்கெனவே கிடைத்த பணம் 30 கோடி சர்க்கார் கையிருப்பில் இருக்கிறதென்பதையும் ஞாபகப் படுத்துகிறோம்.

மேற்படி விற்பனை வரியையோ, கையிருப்புப் பணத்தையோ மது விலக்குக்கு ஈடு செய்யாமல் வேறு வகையில் செலவிடுவது பொது மக்களை வஞ்சித்து மோசம் செய்வதாகும் என்று வற்புறுத்துகிறோம்.

தேசபக்தர் பிரிந்தார்

சென்ற வாரம் தமிழ் நாட்டுக்கு இரண்டு பெரிய நஷ்டங்கள் நேர்ந்திருக்கின்றன. வெவ்வேறு வகையிலே புகழ் பெற்று விளங்கித் தமிழ் நாட்டுக்கு அருந் தொண்டாற்றிய இரு பிரமுகர்கள் நம்மைப் பிரிந்து சென்றார்கள்.

அவர்களில் ஒருவர் திருச்சி தேசபக்தர் டாக்டர் டி. வி. சாமிநாத சாஸ்திரியார். ஒத்துழையாமை இயக்கத்தின் போதும், உப்பு சத்தியாக்கிரக இயக்கத்தின் போதும், காங்கிரஸ் நடத்திய மற்ற விடுதலைப் போராட்டங்களிலும் முன்னணியிலே நின்று பல கஷ்ட நஷ்டங்களை அனுபவித்தவர். காந்தி மகானிடத்திலும் அவருடைய நிர்மாணத் திட்டத்திலும் டாக்டர் சாஸ்திரியாருக்கு எவ்வளவு அபார பக்தி என்பதை அவருடைய கைவிரல்கள் சதா சர்வகாலமும் நிரூபித்துக் கொண்டிருக்கும். பொதுக் கூட்ட மேடையிலும் நண்பர்களின் குழாத்திலும் புத்தகம் படிக்கும்போதும் பிரிட்ஜ் சீட்டு ஆடும் போதும்கூட அவர் கைக் கதிரில் நூற்றுக் கொண்டே யிருப்பார். சிறு கதைகள் பல எழுதியும் "களிராட்டை" என்னும் பத்திரிகையைச் சில காலம் நடத்தியும் தமிழ் மொழிக்குத் தொண்டாற்றியவர். இடையறாத தேச சேவையும் சிறை வாழ்க்கையும் நாளடைவில் அவருடைய தேக சௌக்யத்தை மிகவும் பாதித்து விட்டன. அதனால் வரவர உடல் மெலிந்து, கடைசியாகச் சென்ற ஞாயிற்றுக்கிழமையன்று தேச பக்தர்கள் சேரும் வீர சொர்க்கத்தை அடைந்தார்.


டாக்டர் சாஸ்திரியாரின் வாழ்க்கைத் துணைவிக்கும் அவருடைய ஏக புதல்விக்கும் நம்முடைய மனமார்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.


புலவர்மணி மறைந்தார்


தமிழ்த் தாயின் மற்றொரு அருமைப் புதல்வர், சேதுசமஸ்தான மகா வித்வான், பாஷா கவிசேகர ஸ்ரீ ரா. ராகவையங்கார் அவர்களும் சென்ற வாரத்தில் இம் மண்ணுலகிலிருந்து மறைந்தார். ஸ்ரீ ராகவையங்கார் அவர்கள் தென் மொழியிலும் வட மொழியிலும் தலைசிறந்த வித்வான். அண்ணாமலை சர்வகலாசாலையில் பல வருஷ காலம் தமிழாராய்ச்சித் துறைத் தலைவராக விளங்கி, பல அருமையான நூல்களை வெளியிட்டுத் தமிழுக்கு அருஞ் சேவை செய்திருக்கிறார். கடல் மடை திறந்ததுபோல் அவர் வெள்ளமாகப் பொழிந்து வந்த கம்ப ராமாயண, வால்மீகி ராமாயணப் பிரசங்கங்களைப் பற்றித் தமிழ் உலகம் நன்கறியும்.


மதுரைத் தமிழ்ச் சங்கத்தார் வெளியிடும் "செந்தமிழ்"ப் பத்திரிகையின் ஆரம்பகாலப் பத்திரிகாசிரியர் ஸ்ரீ ரா. ராகவையங்கார் அவர்கள்தான்.

அத்தகைய புலவர்மணியின் மறைவு தமிழ் நாட்டிற்கு ஈடு செய்ய முடியாத ஒரு பெரும் நஷ்டமாகும். அவருடைய அருமைப் புதல்வர் வித்வான் ஸ்ரீ ராமானுஜ ஐயங்கார் அவர்களுக்கும், அவருடைய உறவினர் ஸ்ரீ மு. ராகவையங்கார் அவர்களுக்கும் நமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.


இராணுவ உதவி
"தபால்காரர்கள் வேலை நிறுத்தம் எங்களை என்ன செய்து விடும்? இராணுவத்தின் உதவியினால் தபால் பட்டுவாடா செய்து விடுவோம்!"


காஷ்மீர் சமஸ்தான சர்க்கார் "அன்னியர்கள் தலையிட விடமாட்டோம்" என்று சொல்லி ஜவாஹர்லால்ஜிக்குத் தடை விதித்திருக்கிறார்கள், ஆனால் அன்னிய பிரிட்டிஷ் அதிகார வர்க்கத்தின் ஆதிக்கத்துக்கு உட்பட்டிருப்பதை மறந்து விட்டார்கள் போலும்.
காஷ்மீர் உத்திரவின்றி உள்ளே பிர-வேசிக்கக் கூடாது
சமஸ்தான சர்க்கார்


ஏகபோக
பிரிட்டனுக்கு 375 கோடி டாலர் கடன் கொடுப்பதென்று அமெரிக்கா முடிவாகத் தீர்மானித்திருக்கிறது. இதைப்பற்றி "டெய்லி ஒர்க்கர்" என்னும் பிரிட்டிஷ் பத்திரிகை "இந்தக் கடன் மூலமாக பிரிட்டன் பொன்விலங்கினால் அமெரிக்காவுடன் சேர்த்துக் கட்டப்பட்டிருக்கிறது!" என்று சொல்லுகிறது.


ஸிந்து மாகாணத்து முஸ்லிம் லீக் மந்திரி சபைக்குக் கவர்னர் உயிர்ப்பிச்சை அளித்திருப்பதை அறுப் ஸையத் பலமாகக் கண்டனம் செய்கிறார்.
ஹிதயத்துல்லா
ஸிந்து கவர்னர்
ஸையத்

தமிழ் நாடு உயர்ந்தது!

தயவு செய்து பத்து வருஷங்களுக்குப் பின்னால் செல்லும்படி நேயர்களைக் கேட்டுக் கொள்கிறோம்.

1936-ம் வருஷம் மார்ச் மாதத்தில் ஒரு நாள் பிற்பகல்.

இதாலிய சாம்ராஜ்யத்தின் தலைநகரமான ரோம் நகரம்.

பண்டித ஜவாஹர்லால் நேரு, ஐரோப்பாவிலிருந்து இந்தியாவுக்கு வருகிற வழியில், ரோம் நகரத்து ஹோட்டல் ஒன்றில் கொஞ்ச நேரம் தங்கியிருக்கிறார்.

அருமையான பொக்கிஷம் ஒன்று அவர் வசம் அச்சமயம் இருக்கிறது.

ஸ்விட்ஜர்லாந்தில் காலமான அவருடைய தர்ம பத்தினி ஸ்ரீமதி கமலா நேருவின் அஸ்திதான் அது.

வாழ்க்கையில் மகத்தான நஷ்டத்தை அடைந்த பிறகு, தமது அருமை மனைவியின் அஸ்தியைக் கங்கையில் போடுவதற்காக எடுத்து வந்திருக்கிறார்.

• • •

ஹோட்டலில் நேருஜி தங்கியிருந்த அறைக்கு, முன் பின் அறிமுகம் இல்லாத ஓர் இதாலிய அதிகாரி திடீரென்று விஜயம் செய்கிறார். "எங்களுடைய தலைவர் பெனிட்டோ முஸோலினி தங்களைச் சந்திக்க விரும்புகிறார். இன்று மாலை 6 மணிக்கு உங்கள் சந்திப்புக்கு ஏற்பாடு செய்திருக்கிறது" என்னும் பெரிய செய்தியைத் தடாலென்று தூக்கிப் போடுகிறார்!

• • •

அந்தச் சமயத்தில் முஸோலினியின் அந்தஸ்து எப்படியிருந்தது என்பதை நேயர்கள் ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டும்.

உலக அரசியலில் அவர் அப்போது தாகண்ட இராவணனாக விளங்கினார்!

உலகத்து இராஜதந்திரிகளெல்லாம் 'பெனிட்டோ முஸோலினி' என்ற பெயரைப் பயபக்தியுடன் உச்சரித்தார்கள்.

சில வருஷங்களுக்கு முன்னால் வீழ்ச்சியுற்றுத் தாழ்ந்து கிடந்த இதாலி தேசமானது அவருடைய சர்வாதிகாரத்தின் கீழ் மிகவும் உயர்ந்திருந்தது. இதாலி உலகத்து வல்லரசுகளில் ஒன்றாகக் கருதப்பட்டது.

ஜெர்மன் ஆட்சியை அப்போதுதான் கைப்பற்றியிருந்த அடால்ப் ஹிட்லர், முஸோலினியின் தயவை நாடி அவரைப் பேட்டி காண்பதற்காக இதாலியின் எல்லைப் புறத்துக்கு அடிக்கடி வந்து கொண்டிருந்தார்.

பிரிட்டிஷ் பிரதம மந்திரி சேம்பர்லேன் அடிக்கடி முஸோலினிக்குத் தூது விட்டுக் கொண்டிருந்தார்.

அப்படி முஸோலினியின் அந்தஸ்து உயர்ந்திருந்த காலம் அது.

• • •

முஸோலினியின் தூதர் மேற்கண்ட செய்தியை ஜவாஹர்லால்ஜியிடம் தெரிவித்ததும் பண்டிதருக்கு ஓரளவு வியப்பு உண்டாயிற்று.

ஏனெனில் அவர் ஸ்விட்ஜர்லாந்தில் நோய்ப்பட்ட தமது வாழ்க்கைத் துணைவியின் அருகே இருந்த காலத்தில் இதாலியிலிருந்து அவருக்கு அடிக்கடி மூன்றாம் மனிதர்கள் மூலமாகச் செய்தி வந்து கொண்டிருந்தது. முஸோலினி அவருக்குப் பேட்டி கொடுக்கத் தயாராயிருக்கிறார் என்பதுதான் செய்தி!

முஸோலினியையும் அவருடைய பேஸிஸ்ட் கொள்கையையும் நேருஜி வெறுத்தார். அபிஸீனியாவில் முஸோலினி செய்த அக்கிரமத்தைக் குறித்து ஆத்திரம் கொண்டிருந்தார்.

அத்தகைய அக்கிரமக்காரரைச் சந்திக்க நேரு விரும்பவில்லை. அப்படிச் சந்திப்பது இதாலிய அரசியல் இலாகாவின் பொய்ப் பிரசாரத்துக்கு இடம் கொடுப்பதாகும் என்று எண்ணினார். எனவே, முஸோலினியைப் பார்க்கத் தமக்கு விருப்பமில்லை, பார்க்க முடியாது, கண்டிப்பாக முடியவே முடியாது என்று முற்றெனவே ஸ்பஷ்டமாகத் தெரிவித்திருந்தார்.

அப்படியிருந்தும் இங்கே ரோம் நகரில் தாம் ஒரு நாள் தங்கியிருக்கும் செய்தியை அறிந்து முஸோலினி தம்மைப் பார்க்க வேணுமென்று சொல்லி அனுப்பியது ஜவாஹருக்கு வியப்பை அளித்தது.

ஒரு நிமிஷம் மனதிற்குள்ளே யோசித்து விட்டுத் தமது பழைய முடிவையே உறுதி செய்து கொண்டார்.

அதிகாரியைப் பார்த்து, "மிக்க வந்தனம். ஆனால், எனக்குச் சௌகரியமில்லை. மன்னிக்கவேண்டும்" என்றார்.

அந்த அதிகாரி திடுக்கிட்டுப் போனார். அவர் இத்தகைய பதிலை எதிர்பார்க்கவே இல்லை. முஸோலினி பார்க்க வேண்டுமென்று விரும்பும்போது அதை யாராவது மறுப்பார்களென்று அவர் கனவிலும் எதிர்பார்க்கவே இல்லை.

ஆகையால் நேருவைப் பார்த்து மிக்க விநயமாக, "இரண்டே இரண்டு நிமிஷந்தான்; அதற்கு மேலாகாது. உங்களைப் பார்க்க வேண்டுமென்று அவர் மிக்க ஆவலாக இருக்கிறார். அதற்காகவே மற்ற அலுவல்களை நிறுத்தி வைத்து விட்டுக் காத்துக் கொண்டிருக்கிறார். உங்களுடைய பாஸிஸ்ட் எதிர்ப்புக் கொள்கை அவருக்குத் தெரியும். ஆனபோதிலும் உங்களை நேரில் பார்த்து, உங்கள் மனைவி இறந்ததற்காகத் தம்முடைய அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறார். அவ்வளவுதான்!" என்று மன்றாடினார்.

ஜவாஹர்லால்ஜி மசியவில்லை.

"ஐயா! உங்களைக் கையோடு அழைத்து வருவதாகச் சொல்லிவிட்டு வந்திருக்கிறேனே? அழைத்துப் போகாவிட்டால் என் உத்தியோகம் போய்விடுமே!" என்று அதிகாரி கதறினார்.

அதுவும் பயன்படவில்லை.

இவ்விதமாக ஏறக்குறைய ஒரு மணி நேரம் வரையில் இருவரும் வாதாடினார்கள். இதற்குள் சந்திப்புக்காகக் குறித்திருந்த மணி ஆறு ஆகிவிட்டது!

நேரு பிரயாணத்துக்கு ஆயத்தமானார். இதாலிய அதிகாரி தமது தோல்வியை உணர்ந்தார். ஹோட்டலிலிருந்தே முஸோலினிக்கு ஒரு டெலிபோனைத் தட்டிவிட்டுத் திரும்பிச் சென்றார்.

* * *

அத்தகைய வயிர நெஞ்சு படைத்த பண்டித ஜவாஹர்லால் நேரு,—நாற்பது கோடி மக்களின் இணையற்ற அன்பையும் ஒப்பற்ற பக்தியையும் கவர்ந்த தீர புருஷர்,—வயதிலும் அனுபவத்திலும் முதிர்ந்த பெரியோர்களின் நன்மதிப்பையும் தேசபக்தி ஆவேசம் கொண்ட இளைஞர்களின் மரியாதையையும் ஒருங்கே பெற்ற உத்தமத் தலைவர்,—காங்கிரஸ் மகா சபையின் தியாக சிம்மாசனத்துக்கு ஐந்தாவது முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

பம்பாயில் சென்ற வாரத்திலே கூடிய அகில இந்திய காங்கிரஸ் கூட்டத்தின் போது மேற்படி காங்கிரஸ் சிம்மாசனத்திலே அவர் அமர்ந்தார்.

இத்தகைய தலைசிறந்த கௌரவம்,—தமது வாழ்நாளில் ஐந்தாம் முறையாகக் காங்கிரஸ் அக்கிராசனராகும் கௌரவம்,—இதுவரை வேறு எந்தத் தலைவரும் பெற்றதில்லை. அப்படிப்பட்ட தனிப் பெரும் கௌரவத்தையடைந்த மாபெருந் தலைவருக்கு வாழ்த்துக் கூறுகிறோம்.

அவருடைய தலைமையிலே இந்தியா பூரண சுதந்திரம் பெறவேண்டும் என்று நம்புகிறோம்.

இனி இதற்கு மேலே பண்டித நேரு அடையக் கூடிய சிறப்பு ஒன்றே ஒன்றுதான் இருக்கிறது.

சுதந்திர இந்தியக் குடியரசின் முதலாவது அக்கிராசனராகும் சிறப்பை அவர் கூடிய விரைவிலே பெறவேண்டுமென்று வாழ்த்துகிறோம்.

* * *

பண்டித நேரு இப்போது வீற்றிருக்கும் சிம்மாசனத்தை அவருக்குக் காலி செய்து கொடுத்த மௌலானா அபுல் கலாம் ஆஸாதின் பெயர் இந்தியாவின் சுதந்திர சரித்திரத்திலே என்றும் அழியாத பொன் வர்ண மையினால் எழுதப்பட்டு விளங்கும் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை.

ஐந்தாவது தடவையாகக் காங்கிரஸ் சிம்மாசனம் ஏறுவதில் பண்டித ஜவாஹர்லால் எவ்வளவு சிறப்பை அடைகிறாரோ அவ்வளவு சிறப்பை வேறொரு வகையில் மௌலானா ஆஸாது அடைந்திருக்கிறார்.

ஆறுவருஷ காலத்துக்குமேல் அவர் காங்கிரஸ் தலைமைப் பதவியை மிகச் சிறப்பாக வகித்து அந்தப் பதவிக்கே ஒப்பற்ற கௌரவத்தைத் தந்திருக்கிறார்.

அவருடைய தலைமையின் கீழ் இந்தியாவின் சுதந்திரத்துக்காக மிகப் பெரிய புரட்சி இயக்கம் நடந்தது.

அவர் தலைமை வகிக்கும் காலத்தில் பிரிட்டிஷார் இந்தியக் காங்கிரஸ் தலைவர்களோடு சமரசம் பேசி இந்திய அரசியல் பிரச்னையைத் தீர்க்க மூன்று தடவை முயற்சி செய்தார்கள்.

1942-ல் ஸர் ஸ்டாபோர்டு கிரிப்ஸை அனுப்பினார்கள். 1945-ல் ஸிம்லாவுக்கு அழைத்தார்கள். 1946-ல் பிரிட்டிஷ் மந்திரிகள் மூன்று பேர் வந்தார்கள்.

இந்த மூன்று சந்தர்ப்பங்களிலும் மௌலானா ஆஸாது காட்டிய அறிவாற்

றனும் இராஜ தந்திரமும் தன்னலம் கருதாத பெருந்தன்மையும் உலகம் பார்த்து அதிசயிக்கக் கூடியவை.

அத்தகைய உத்தம புருஷரையும் அவருடைய மகத்தான தேசத் தொண்டையும் என்றும் மறக்க முடியாது.

* * *

புதிய காங்கிரஸ் அக்கிராசனர் புதிய காரியக் கமிட்டியை நியமித்துக் கொண்டிருக்கிறார். புதிய கமிட்டியை,

"பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையினானே"

என்னும் நன்னூல் சூத்திரத்துக் கிணங்க அமைத்திருக்கிறார்.

காரியக் கமிட்டியில் வெகு காலமாக 'நிரந்தர' ஸ்தானம் வகித்து வந்த சிலர் புதிய கமிட்டியில் இல்லை.

அதிக பிரபலமடையாத இளம் தேசிய வீரர்கள் சிலர் புதிய கமிட்டியில் ஸ்தானம் பெற்றிருக்கிறார்கள்.

இந்தப் புதிய காரியக் கமிட்டியில் தமிழ் மக்களாகிய நமக்குப் பெரிதும் உவகை யளிக்கக் கூடிய காரியம் ராஜாஜியின் நியமனம் என்று சொல்ல வேண்டியதில்லை.

புதிய காரியக் கமிட்டியில் ராஜாஜி அங்கத்தினராக நியமனம் பெற்றதினால் தமிழ் நாடு உயர்வடைந்தது; தமிழ் மக்களும் உயர்ந்திருக்கிறார்கள்.

* * *

சென்ற வருஷம் இதே காலத்தில் தமிழ் நாட்டின் அரசியல் நிலைமை எப்படி யிருந்தது என்பதை நேயர்கள் கடைசித் தடவையாக ஞாபகப்படுத்திக் கொண்டு பிறகு மறந்துவிடுவார்களாக!

அரசியல் போராட்ட முறையில் அபிப்பிராய பேதம் காரணமாக மூன்று வருஷம் காங்கிரஸிலிருந்து ராஜாஜி விலகி யிருந்தார்.

பெயரளவிலேதான் காங்கிரஸி லிருந்து விலகி யிருந்தாரே யொழிய உண்மையில் அவர் அந்த மூன்று வருஷமும் காங்கிரஸுக்கு அரும் பெருந் தொண்டு புரிந்துகொண்டுதான் வந்தார்.

காங்கிரஸிலிருந்து சிலகாலம் விலகி யிருந்த படியால் ராஜாஜி காங்கிரஸுக்கு விரோதி என்று சொல்வது எப்படி யென்றால், கிருஷ்ண பகவான் அஸ்தினாபுரத்துக்குத் தூது சென்றபடியால் அவர் பாண்டவர்களுடைய கட்சியிலே இல்லை, — துரியோதனனுடைய கட்சியிலே சேர்ந்து விட்டார் என்று சொல்வது போலவே யாகும்.

இதையெல்லாம் காந்தி மகானும் மற்ற காங்கிரஸ் காரியக் கமிட்டித் தலைவர்களும் நன்கு அறிந்திருந்தார்கள்.

எனவே, காரியக் கமிட்டித் தலைவர்கள் விடுதலையானதும் ராஜாஜி காங்கிரஸில் மீண்டும் சேர விரும்பியதை மிக்க மகிழ்ச்சியுடன் வரவேற்றார்கள்.

அவரைக் காரியக் கமிட்டியில் பழைய படி சேர்த்துக் கொள்ள வேண்டும் என்றும் விரும்பினார்கள்.

அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியில் அங்கத்தினரா யிருப்பவரைத்தான் காரியக் கமிட்டியில் நியமிக்கலாம் என்பது காங்கிரஸ் சட்டம். அகில இந்தியக் கமிட்டியில் அங்கத்தினராவதற்கு மாகாணக் கமிட்டி அங்கத்தினரா யிருக்க வேண்டும். இதற்காகத்தான் ராஜாஜி தாம் ஏற்கெனவே ராஜினாமா செய்த திருச்செங்கோடு தொகுதியிலிருந்து மாகாணக் கமிட்டி அங்கத்தினராக விண்ணப்பம் போட்டார்.

மேற்படி திருச்செங்கோடு தேர்தலை ஆட்சேபனை செய்து எழுந்த விகாரமான கிளர்ச்சியையும் அதன் விபரீத விளைவுகளையும் கிளறாமல் விடுவதே நலமாகும்.

ஆனால் முக்கியமாகக் கவனிக்க வேண்டிய விஷயம், அந்தச் சந்தர்ப்பத்தில் ஆந்திர மாகாணக் காரியக் கமிட்டியார் "ராஜாஜியைக் காங்கிரஸில் நாலணா அங்கத்தினராகக்கூடச் சேர்த்துக் கொள்ளக் கூடாது" என்று தீர்மானம் செய்ததுதான். ஒத்துக்கு மத்தளமாகத் தமிழ் நாட்டிலும் சில காங்கிரஸ் கமிட்டிகள் மேற்கண்டவாறு தீர்மானம் செய்தன. இது எல்லாவற்றிற்கும் காரணம் சட்ட சபைத் தேர்தலும் மந்திரி பதவிகளுமே என்பது ஸ்பஷ்டமாகத் தெரிந்தது.

ஆந்திரர்கள் "இந்தத் தடவை ஆந்திர பிரதம மந்திரிதான் வரவேண்டும்" என்று தீர்மானித்திருந்தார்கள். தமிழ்நாட்டில் சிலர் தாங்கள் மந்திரி பதவிக்கு வந்தே தீர்வது என்று முடிவு செய்திருந்தார்கள். இவற்றின் பயனாக ராஜாஜிக்கு விரோதமான கிளர்ச்சி நாளுக்கு நாள் விகாரமாகி வந்தது.

தமிழ் நாட்டிலே தம் காரணமாக இந்தப் பிளவு ஏற்பட்டிருந்தது ராஜாஜிக்கு அளவில்லாத வேதனையை அளித்தது. சமரசத்துக்காக அவர் எவ்வளவோ முயன்று பார்த்தார். எவ்வளவோ விட்டுக் கொடுத்துப் பார்த்தார். தம்மை ஆதரித்த நண்பர்களையும் கைவிட்டுப் பார்த்தார். ஒன்றும்

பலிக்கவில்லை. நிலைமை நாளுக்கு நாள் கேவலமாகி வந்தது. கடைசியாக ''நான் சட்டசபைக்கே நிற்கவில்லை'' என்று விலகிக் கொண்டார்.

இதை யெல்லாம் தூரத்தி லிருந்து காங்கிரஸ் மாபெரும் தலைவர்கள் பார்த்துக் கொண்டு வந்தார்கள். சுயநலப் பதவிச் சூழ்ச்சி காரணமாக ராஜாஜியின் சேவையைச் சென்னை மாகாணம் இழந்து விடுவதை அவர்கள் விரும்பவில்லை. ராஜாஜியைக் கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கும்படி மறுபடியும் ஆலோசனை சொன்னார்கள்.

அந்த ஆலோசனையைச் சென்னைச் சட்ட சபையின் காங்கிரஸ் எம். எல். ஏ.,க்கள் புறக்கணித்துத் தங்களுக்கு என்றும் அழியாத புகழைத் தேடிக் கொண்டார்கள்!

அதன் பலனை இன்று சென்னை மாகாணம் அநுபவிக்கிறது. காங்கிரஸ் மந்திரிசபை ஏற்பட்டு மூன்று மாதம் ஆகியும் நாட்டின் நிலைமையில் எந்த விதமான அபிவிருத்தியும் ஏற்படவில்லை. சோற்றுப் பஞ்சமும் துணிப் பஞ்சமும் நாளுக்கு நாள் கொடுமையாகி வருகின்றன. லஞ்சப் பேய் தலைவிரித்துத் தாண்டவமாடுகிறது.

சென்னை மாகாணம் மற்ற மாகாணங்களுக்கெல்லாம் வழி காட்டியாக இருந்தது போய், மற்ற மாகாணங்கள் எல்லாம் சென்னையை முந்திக்கொண்டு முன்னேறி வருகின்றன.

இதுதான் நிலைமை. இந்தச் சீர்கேடான நிலைமையைச் சீர்திருத்திக் கொள்வதற்கு அதிர்ஷ்டவசமாக மீண்டும் நமக்குச் சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. அந்தச் சந்தர்ப்பத்தைக் காங்கிரஸ் தலைவர் ஜவாஹர்லால் நேரு நமக்கு அளித்திருக்கிறார்.

திருச்செங்கோடு தேர்தல் கிளர்ச்சியிலிருந்து, நமது மாபெருந் தலைவர்களின் யோசனையை மாகாண சட்டசபை நிராகரித்தது வரையில் எல்லா விவரங்களும் நேருஜிக்குத் தெரியும்.

1942-ல் ராஜாஜி காங்கிரஸுடன் மாறுபட்டுப் பிரிந்திருந்ததும் அவருக்குத் தெரிந்த விஷயந்தான்.

1942-இயக்கத்தில் ஈடுபட்ட பல பழைய பிரமுகர்களை அவர் புதிய கமிட்டியில் சேர்த்துக் கொள்ளாமல் விட்டிருக்கிறார். ஆனால், ராஜாஜியை எடுத்துக் கொண்டிருக்கிறார்.

இதிலிருந்து ஜவாஹர்லால்ஜியும் மற்றப் பெருந் தலைவர்களும் ராஜாஜியின் அறிவாற்றலின் எவ்வளவு மதிப்பு வைத்திருக்கிறார்கள் என்பதும், அவருடைய ஆலோசனைகளை எவ்வளவு தூரம் விரும்புகிறார்கள் என்பதும் மிகத் தெளிவாகிறது.

* * *

இந்த 1946-ம் வருஷ ஆரம்பத்தில் நாம் ''தமிழ் நாட்டின் பிளவுகள் ஒரு தீய கனவைப்போல் மறைந்து விட்டன'' என்று எழுதினோம். அப்படி எழுதியதுதான் கனவாகப் போயிற்று. பிளவுகள் மறையவில்லை; அதிகமாயின. அதற்குக் காரணம் சட்டசபைத் தேர்தலும் மந்திரி பதவிகளும் முன்னால் வந்து நின்றதுதான்.

இனிமேல் அந்தத் தொல்லை கிடையாது. ஆந்திர கேசரி பிரகாசம் அழுத்தமாகப் பிரதம மந்திரி பதவியில் உட்கார்ந்திருக்கிறார். மற்ற மந்திரிகளும் கெட்டியாகப் பதவிகளைப் பற்றிக் கொண்டிருக்கிறார்கள். திருப்தியோ, அதிருப்தியோ, குற்றமோ, குறையோ, மேற்படி மந்திரிகளை வைத்துக் கொண்டு, அவர்கள் மூலமாகத்தான், இந்த மாகாணத்தின் நன்மையை நாம் இனித் தேடியாக வேண்டும்.

அதற்கு இம் மாகாண காங்கிரஸ்வாதிகளுக்குள்ளே ஒற்றுமை வேண்டும். முக்கியமாக, தமிழ் நாட்டுக் காங்கிரஸ்காரர்கள் ஒற்றுமைப்பட வேண்டும். மந்திரி பதவிப் போட்டி ஒழிந்து விட்டபடியால் இனிப் பிளவுக்கும் சண்டைக்கும் காரணம் அதிகம் ஏற்படாது.

ராஜாஜியின் தலைமையில் தமிழ் நாட்டுக் காங்கிரஸ்வாதிகள் அனைவரும் இனி ஒன்றுபட்டுத் தமிழ் மக்களின் நன்மையையும் தமிழ் நாட்டின் மேன்மையையும் ஸ்தாபிக்கலாம். சென்னை மாகாணத்தையும் உன்னத நிலைமைக்குக் கொண்டு வரலாம்.

இதெல்லாம் நடைபெறக் கூடும் என்பதற்கு அறிகுறி சமீபத்தில் காணப்பட்டிருக்கிறது. அரசியல் நிர்ணய சபைத் தேர்தல் விஷயத்தில் ராஜாஜியின் யோசனைகளை எல்லாக் கட்சித் தலைவர்களும் நாடியிருக்கிறார்கள். இத்தகைய நல்ல நிலைமை அற்ப சந்தோஷமாகப் போய்விடாமல் நீடித்து நிலைத்திருக்க வேண்டுமென்று விரும்புகிறோம். முன்போலவே தமிழ் நாடு எல்லாத் துறைகளிலும் பாரத தேசத்துக்கே வழிகாட்டியாயிருக்க வேண்டுமென்று ஆசைப்படுகிறோம்.

சென்ற இதழின் வெளியான காலக்ஷேபத் துணுக்குக்குப் பரிசு பெற்றவர்: மு. சொ. ராமலிங்கம், 26, சாம்பையர் தெரு, ஜி. டி. சென்னை.

தெரிந்து போச்சுங்க!

ஆலைத்தொழிலாளி

தெரிந்துபோச்சு ரொம்பநல்லாத் தெரிந்துபோச்சுங்க!
திறமையில்லா ஆட்சியென்று தெரிந்துபோச்சுங்க!

மவராசன் மில்லைமூடி மாசம்ஒண்ணாச்சு — இன்று
மனைவிமக்க ளோடுநாங்க மாண்டுமடியறோம்
தவறாமல் சென்றுநித்தம் தலைவரைப்பார்த்து — எங்கள்
தலைவிதியைக் குறித்துக்கேட்டுத் தலையைச்சொறியறோம்! (தெரி)

இந்தமாசம் சம்பளமும் அலவுன்கும்போச்சு — ஐயோ!
இன்னும்அரிசி பருப்புரேஷன் அம்புட்டும்போச்சு!
மந்திரிமார் மலைகளிலே இரும்போ தெரியலே — அவர்கள்
மத்தியஸ்தம் பண்ணுறாங்க இன்னும்முடியலே! (தெரி)

வீட்டுக்காரன் வாடகைக்குச் சண்டைபோடறான் — 'நீ
வீட்டைக்காலி செய்துவிட்டுப் போடா!' என்கிறான்!
சேட்டுவந்து வட்டிகேட்டு வழிமறிக்கிறான் — புரோ
நோட்டைக்காட்டித் தாவாபோட்டு விடுவேனென்கிறான்! (தெரி)


அணைந்துகிடக்கும் அடுப்பங்கரையில் பூனை தூங்குது — பிள்ளை
அண்டைஅயலில் இரந்துநின்று வயிறுவளர்க்குது
மணந்துகொண்ட மனைவிதுயரம் பார்க்கமுடியலே!
'மானம்எண்ணி ஆலைப்பக்கம் போகமுடியலே! (தெரி)

'லாட்டு'ப்போட்ட ஆட்சி அதிகாரவர்க்கமோ? — இந்த
வோட்டுப்பெற்ற ஆட்சிபட்டும் வேறுவர்க்கமோ?
கூட்டம்போட்டுப் பேசக்கூட உரிமையில்லையா? — போலீஸ்
வேட்டையாடப் பார்த்திருக்க வெட்கமில்லையா? (தெரி)

'மறியல்செய்ய உரிமையுண்டு; நாங்கள்மறுக்கலே — ஆனால்
தடுக்கப்போலீஸ் காரரையும் அனுப்புவோம்' எனும்
மருமமான இந்தப்பேச்சு தருமமாகுமோ? — ஊர்
சிரிக்குமிந்த 'ஸ்டேட்மெண்'டுக்கு இவர்கள்வேண்டுமோ? (தெரி)

ஆர்வி மில்லின் அமர்க்களத்தை அறிந்திருப்பீங்க — வி. ஆர்.
ஆட்சிசெய்த அற்புதத்தைப் பார்த்திருப்பீங்க!
பார்புகழும் அவரைப்பதவிப் பித்தரென்றாங்க — அந்தப்
பதவிக்கேஅவ மானம் இன்று தேடிப்பிட்டாங்க! (தெரி)

காலமெல்லாம் காந்திமகான் பேரைச்சொன்னாங்க — நம்ம
காங்கிரஸின் பக்கம்நின்று வோட்டுப்பெற்றாங்க!
காலம்போற போக்கைப்பார்த்தாக் கவலையாகுது — சென்னைக்
காங்கிரசு கவர்மெண்டைக் கடவுள்காக்கணும்! (தெரி)



★ "இந்தச் செந்தமிழ் நாட்டிலே பிறப்பதற்கு நமது குழந்தைகள் என்ன பாவம் செய்தன?" என்று தோன்றுமாறு நமது பள்ளிக்கூடங்களின் பாட திட்டமும் பாட புத்தகங்களும் அமைந்திருக்கின்றன. கல்வி என்ற பெயரால் இத்தகைய சித்திரவதையை நிறுத்துவதற்குக் குழந்தைகளிடம் ஈவிரக்கமுள்ளவர்கள் எல்லாரும் பிரயத்தனம் செய்ய வேண்டும்.

என்ன பாவம் செய்தன!

ரா.கி.

பாகவத புராணத்தில் கம்ஸன் என்னும் மனித உருக் கொண்ட அரக்க மன்னனைப் பற்றிப் படித்திருக்கிறோம். தன்னுடைய ராஜ்யத்திலே பிறக்கும் குழந்தைகளையெல்லாம் கொன்று விடும்படியாக அந்தப் பொல்லாத ராட்சதன் கட்டளையிட்டான். அவனுடைய ராஜ்யத்துக்கு அப்பால் வேறு நாடுகளிலே பிறக்கும் குழந்தைகளையும் கொல்வதற்கு மாயாவிகளான பூதகி முதலிய ராட்சஸிகளையும் சகடாசுரன், திருணவர்த்தன் முதலிய ராட்சஸர்களையும் ஏவினான்.

அப்பேர்ப்பட்ட கம்ஸனையும் அவனுடைய கட்டளையை நிறைவேற்றிய தூதர்களையும் தோற்கடிக்கும்படியான காரியத்தைச் செய்யும் சிலர் இந்தக் காலத்திலே இருக்கிறார்கள். சின்னஞ்சிறு குழந்தைகளை அந்த மகான்கள் கொல்லுவதில்லை; — இல்லை, ஒரு வழியாகக் கொன்று விடுவதில்லை. குழந்தைகளை உயிரோடு வைத்துச் சித்திரவதைதான் செய்கிறார்கள்!

கம்ஸனுக்குக் குழந்தைகள் மீது துவேஷம் ஏற்படுவதற்கும், குழந்தைகளையெல்லாம் கொன்று விடுமாறு அவன் கட்டளை போடுவதற்கும் ஏதோ ஒரு காரணம் இருந்தது. அவனைக் கொல்லப் பிறந்த குழந்தை எப்படியோ அவனுடைய கட்டுக் காவலிலிருந்து தப்பித்துச் சென்று விட்ட படியால் எல்லாக் குழந்தைகளையும் அவன் வேலை தீர்த்து விட விரும்பினான்!

ஆனால் இந்தக் காலத்துக் கம்ஸர்களுக்கும் அவர்களுடைய தூதர்களுக்கும் அத்தகைய காரணம் எதுவுமே இல்லை.

அவர்கள் யார் என்று கேட்டால், பள்ளிக்கூடங்களிலே படிக்கும் குழந்தைகளுக்காகப் பாட திட்டங்களை வகுப்பவர்களும், வகுத்த பாட திட்டங்களுக்கு ஏற்பப் பாட புத்தகங்களை எழுதுகிறவர்களும்தான்!

தமிழ் நாட்டிலே பிறந்து வளர்ந்து பள்ளிக்கூடங்களுக்குப் போகும் துர்ப்பாக்கியத்தைப் பெற்ற குழந்தைகள் மேற்படியார்களுக்கு யாதொரு விதமான தீங்கும் செய்யவில்லை. குழந்தைகளின் மேல் அவர்களுக்குத் துவேஷம் உண்டாவதற்கு யாதொரு காரணமும் கிடையாது. ஆனாலும் குழந்தைகளின் ஜன்ம விரோதிகளைப் போல் அவர்கள் பாட திட்டங்களை வகுத்திருக்கிறார்கள்; பாட புத்தகங்களை எழுதியிருக்கிறார்கள். அத்தகைய பாட புத்தகங்களை வைத்துக் கொண்டு போதிக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு ஆளாகியிருக்கும் ஏழை உபாத்தியாயர்கள் என்ன செய்வார்கள்? அவர்கள் தங்களையும் வதைத்துக் கொண்டு தங்களிடம் வந்து சிக்கிக் கொள்ளும் குழந்தைகளையும் வதைக்கிறார்கள்!

இப்படிக் குழந்தைகளைச் சித்திரவதை செய்வதற்கென்றே ஏற்பட்ட பயங்கரக் கருவிகளில் இலக்கணம் என்பது ஒன்று.

இலக்கண அரக்கன்!

சில வருஷத்துக்கு முன்னால் நமது கல்வி இலாகாத் தலைவர்களுக்கு ஏதோ கொஞ்சம் நல்ல புத்தி உதயமாகி, — குழந்தைகளிடம் ஏதோ சிறிது கருணை பிறந்து, — பாஷைப் பயிற்சியில் இலக்கணம் முக்கியமில்லை என்று ஏற்படுத்தியிருந்தார்கள். யார் செய்த பாவமோ என்னமோ, எந்த ராட்சஸ மூளையில் மறுபடியும் தோன்றிற்றோ என்னமோ, இலக்கண அரக்கன் மறுபடியும் பாட திட்டங்களில் புகுந்து கொண்டு விட்டான்! பள்ளிக்கூடத்துக்குப் போகும் சின்னஞ் சிறு குழந்தைகளை, — பால் மணம் மாறாத பாலகர்களை, — அந்தப் பாதகன் பயங்கரமாகச் சித்திரவதை செய்யத் தொடங்கியிருக்கிறான்!

நாம் ஏதோ மிகைப்படுத்திச் சொல்கிறோம்,—அளவுக்கு மீறிய கடும் மொழிகளை உபயோகிக்கிறோம் என்று சில நேயர்களுக்குத் தோன்றலாம். நல்லது; இரண்டொரு உதாரணம் சொல்கிறோம், கேளுங்கள். கேட்ட பிறகு, நாம் அதிகக் கடுமையான வார்த்தைகளை உபயோகித்து விட்டோமா என்று தீர்ப்புக் கூறுங்கள்.

“புதுமுறை இலக்கணச் சுருக்கம்” என்பதாக ஒரு பாட புத்தகம் இருக்கிறது. இது பாடசாலைகளில் முதல் பாரம் முதல் மூன்றாம் பாரம் வரையில் படிக்கும் மாணாக்கர்களுக்காக ஏற்பட்டது. அதாவது சுமார் 11 வயது முதல் 13 வயது வரை உள்ள குழந்தைகள் படிப்பதற்காக ஏற்பட்டது. சென்னை சர்க்காரின் டெக்ஸ்ட் புக் கமிட்டியினால் அங்கீகரிக்கப் பெற்றது. இந்தப் புத்தகத்தின் தலைப்பிலே,

“தமிழ் இலக்கணம் என்பது, தமிழ் மொழியைப் பிழையில்லாமல் பேசவும் எழுதவும் கற்பிற்கும் நூலாகும்.”

என்கிற பிழையில்லாத தமிழ் வாக்கியம் காணப்படுகிறது!

(ஆம்; ‘கற்பிற்கும்’ என்றுதான் புத்தகத்தில் இருக்கிறது. சந்தேகம் உள்ளவர்கள் நமது காரியாலயத்துக்கு வந்து புத்தகத்தைப் பார்த்து விட்டுப் போகலாம்.)

இப்பேர்ப்பட்ட இலக்கண நூலில், அதாவது சின்னஞ் சிறு குழந்தைகளுக்குத் தமிழ் மொழியைப் பிழையில்லாமல் பேசவும் எழுதவும் ‘கற்பிற்கும்’ நூலில் 36-ம் பக்கத்தில் பின்வரும் விதி காணப்படுகிறது:

“108. விகாரப் புணர்ச்சியாவது, நிலைமொழிக்கும் வரும் மொழிக்கும் இடையில் எழுத்தாவது சாரியையாவது தோன்றுதலும், நிலைமொழியின் ஈற்றெழுத்தாவது வருமொழியின் முதலெழுத்தாவது அவ்விரண்டுமாவது திரிதலும் கெடுதலும் அடைய, அவ்விரு மொழியும் கூடுவது.”

அதே நூலில் 45-ம் பக்கத்தில் பின்வரும் விதிகள் காணப்படுகின்றன:

“9. முன்னே ஒரு நெட்டெழுத்தும் பின்னே ஒரு குற்றெழுத்துமாகிய இரண்டெழுத்தாலாகிய மொழியின் இறுதியிலேனும் இரண்டின் மிக்க எழுத்துக்களாலாகிய மொழியின் இறுதியிலேனும் க், ச், ட், த், ப், ற் என்னும் ஆறு வல்லின மெய்களுள் ஒன்றைச் சேர்ந்து வரும் உகரம் தன் ஓசையிற் குறையும். அவ்வுகரம் குற்றியலுகரம் எனப்படும்.”

“10. உகரம் ஒரு குற்றெழுத்தாலும், இரண்டு குற்றெழுத்தாலுமாகிய மொழிகளின் இறுதியில் வல்லின மெய்யை ஊர்ந்து வரினும், மொழி முதலினும் இடையிலும் உள்ள வல்லின மெய்யை ஊர்ந்து வரினும், மொழி முதல் இடை கடைகளில் மெல்லின இடையின மெய்களை ஊர்ந்து வரினும் தனக்கு இயல்பாயுள்ள ஓசையிற் குறையாது; ஆதலின், அது குற்றியலுகரமாகாது. முற்றியலுகரம் எனப்படும்.”

மேற்படி இலக்கண விதிகளைப் படிக்கும்படியான தலைவிதியுள்ள சின்னஞ் சிறு குழந்தைகளின் கதியைத் தயவு செய்து எண்ணிப் பாருங்கள். குழந்தைகளைப் பெற்ற தாய் தந்தைமார்களே! தயவுசெய்து கொஞ்சம் கவனியுங்கள்.

இத்தகைய இலக்கண பாட புத்தகங்களைப் படிக்க வேண்டியிருந்தும் நம்முடைய குழந்தைகள் அறிவுத் தெளிவோடு இருக்கின்றன,—மூளை கலங்கிப் போய்ப் பைத்திய மருத்துவ சாலைக்குப் போகாமலிருக்கின்றன என்றால்,—அதற்குக் காரணம், மிகப் பெரும்பாலான குழந்தைகள் இம்மாதிரியான பயங்கர இலக்கண விதிகளைப் படிக்காமல் விட்டு விடுவதுதான். “இலக்கணத்துக்குள்ள மார்க் தொலைந்து போகட்டும்! மற்றப் பாடங்களுக்கு வரும் மார்க் வந்தால் போதும்” என்று குழந்தைகள் பெரும்பாலும் இலக்கணத்தை விட்டுத் தொலைப்பதினாலேயே மூளை குழம்பாமல் தப்பிப் பிழைக்கின்றன. இத்தகைய இலக்கண விதிகளைப் படித்துப் புரிந்து கொண்டு பரீட்சையில் எழுத வேண்டுமென்று முயலும் குழந்தைகளின் கதி அதோகதிதான்!

“புது முறை இலக்கணச் சுருக்கம்” எழுதிய புண்ணியவானை நாம் குறைகூறவில்லை. ஏதோ அவருடைய தலைவிதியை நினைத்து ஜீவனோபாயத்தை உத்தேசித்துப் புத்தகம் எழுதியிருக்கிறார்.

நாம் குற்றம் கூறுவதெல்லாம் குழந்தைகளுக்குப் பாட திட்டம் வகுத்த புண்ணியவான்களையே யாகும்! சின்னஞ் சிறு குழந்தைகளை இத்தகைய சித்திரவதைக்கு உள்ளாக்கத் துணிந்த அந்த மகான்கள் இகத்திலும் பரத்திலும் என்ன கதியை அடையப் போகிறார்களோ என்று எண்ணும் போது அவர்கள் மீது நமக்கு இரக்கமும் உண்டாகிறது.

அம்மாதிரியே “பூந்தமிழ் இலக்கணம்” என்னும் நூலை எழுதிய செந்தமிழ்ப் பண்டித மணியின் மீதும் நாம் எள்ளளவும் குற்றம் கூறவில்லை.

இந்த நூலுக்குப் “பூந்தமிழ் இலக்கணம்” என்று பெயர் கொடுத்தபோது தெரிந்தோ தெரியாமலோ அப் பெரியார் இடக்கரடக்கல், மங்கலம் எனப்படும் தகுதி வழக்கு

இலக்கணத்தை யொட்டியே பெயர் கொடுத்திருக்க வேண்டும்! *

மேற்படி "பூந்தமிழ் இலக்கணம்" என்னும் நூலின் முகவுரையில் ஆசிரியர், இந்த நூலானது, 'அரசியலார் புதிதாய் வகுத்த பாட திட்ட முறைப்படியே 4, 5, 6-ம் பார மாணவர்களுக் கென்று சிறந்த முறையில் எழுதப் பெற்றது' என்றும், 'அரசியலார் 1942-ம் ஆண்டில் மிக முக்கியமெனக் குறிப்பிட்ட 63 நன்னூல் சூத்திரங்களையும் மற்றைய நன்னூல் சூத்திரங்களையும்' இந்தப் புத்தகத்தில் சேர்த்திருப்பதாகவும் சொல்லி யிருக்கிறார்.

1942-ம் ஆண்டில் அரசியலார் தேசத்தில் எத்தனையோ கொடுமைகளை இழைத்தனர் என்பதை எல்லாரும் அறிவார்கள். அவற்றுளெல்லாம் பெருங் கொடுமை, ஹைஸ்கூல் மாணாக்கர்களின் பாட திட்டத்தில் தமிழ் இலக்கணத்தைப் புதிதாகச் சேர்த்ததுதான் என்று நாம் கருதுகிறோம்!

"பூந்தமிழ் இலக்கணத்"தின் மூன்றும் பக்கத்தில் எடுத்துப் போடப் பட்டிருக்கும் 'அரசியலார் மிக முக்கிய மெனக் குறிப்பிட்ட நன்னூல் சூத்திரம்' இதுவாகும்:—

"உயிர்மெய் ஆய்தம் உயிரளபு ஒற்றளபு
அஃகிய இ உ ஐ ஔ மஃகான்
தனிநிலை பத்தும் சார்பெழுத்தாகும்."

செந்தமிழ் மொழியைப் பிழையில்லாமல் எழுதவும் பேசவும் மேற்படி பல்லுடைக்கும் சூத்திரம் தெரிந்திருக்க வேண்டியது அவசியந்தானு என்று கேட்கிறோம்.

இன்னும் இந்த நூலின் 65-ம் பக்கத்தில் உள்ள, "நிலைமொழி மகர விற்றுச் சொற்களின் முன் உயிர், வல்லினம், மெல்லினம், இடையினம் என்னும் நான்கு வகையில் எது வரினும், ஈற்று மகர மெய் கெட்டு உயிரீற்றின் முன் உயிரும் வல்லினமும் மெல்லினமும் இடையினமும் புணர்வதுபோலப் புணரும்; சில விடங்களில் வல்லினம் வரின் மகர மெய் கெடாமல் வந்த வல்லினத்திற்கு இனமாகத் திரியும்" என்னும் மகா பயங்கரமான மகர வீற்றுப் புணர்ச்சி விதியைப் படித்து நமது பச்சிளங் குழந்தைகள் புரிந்து கொள்ளா விட்டால், தமிழைப் பிழையின்றி எழுத முடியாதா என்று கேட்கிறோம்.

அப்படியானால், நமது அருமைச் செந்தமிழ் நாட்டுக் குழந்தைகள் தமிழை எவ்வளவு பிழைகளுடனே வேண்டுமானாலும் எழுதட்டும், இந்தக் கோரமான சித்திர வதைக்கு மட்டும் ஆளாக வேண்டாம் என்று சொல்கிறோம்.

தமிழ் மொழியைப் பிழை யில்லாமல் எழுதவும் பேசவும் கற்றுக் கொள்வதற்கு இலக்கணம் படித்தல் அவசியமே இல்லை. இதை ஆயிரம் கோவில்களிலே சத்தியம் செய்து சொல்லத் தயாரா யிருக்கிறோம்.

இலக்கணம் கற்றுக்கொண்டு அந்த விதிகளின்படி பேசவோ, எழுதவோ ஆரம்பித்தால் பேசவும் வராது; எழுதவும் வராது.

பிழையில்லாமல் தமிழ் எழுதவும் பேசவும் கற்றுக் கொள்வதற்கு ஒரே ஒரு வழிதான் உண்டு. அது, பிழையில்லாமல் எழுதப் பட்ட புத்தகங்களைப் படிப்பதுதான்.

அவ்வப்போது மாணாக்கர்கள் எழுதுவதிலும் பேசுவதிலும் பிழையிருந்தால் ஆசிரியர் திருத்திக் கொடுக்கலாம். இதுகூடக் குழந்தைகள் விஷயத்தில் செய்யக் கூடாது. முதலிலே இஷ்டம் போல் பேசவும் எழுதவும் விடவேண்டும். பிற்பாடு அதாவது ஏழாவது எட்டாவது பாரத்துக்குப் பிறகு பிழைகளை எடுத்துக் காட்ட வேண்டும்.

காலேஜ் வகுப்புகளிலேதான் இலக்கணம் சொல்லிக் கொடுக்க வேண்டும். அதிலும் மொழி ஆராய்ச்சியையே முக்கிய பாடமாக எடுத்துக் கொள்கிறவர்களுக்கே இலக்கண விதிகளைச் சாங்கோபாங்கமாகக் கற்பித்தல் முறை. சுருங்கச் சொன்னால், தமிழ் வித்வான் பரீட்சைக்கோ, தமிழ் எம். ஏ. பரீட்சைக்கோ போகிறவர்களுக்குத் தான் இலக்கணப் பயிற்சி தேவை. மற்றவர்களுக்கு அவசியமில்லை. நாலாவது பாரத்திலிருந்து ஆறாவது பாரம் வரையில் படிக்கும் மாணவர்களுக்கு ஒருமை பன்மை, ஆண்பால் பெண்பால், வேற்றுமை விதிகளை நடைமுறைக்கு அவசியமான அளவில் சொல்லிக் கொடுத்தால் போதும். முதல் பாரத்திலிருந்து மூன்றாவது பாரம் வரையில் இலக்கண விதிகளைச் சொல்லிக் கொடுப்பது குழந்தைகளைச் சித்திரவதை செய்வதைத் தவிர வேறொன்றும் இல்லை.

* அருவருப்பு உண்டாக்கும் விஷயத்தை மறைமுகமாய்ச் சொல்வதற்கு 'இடக்கரடக்கல்' என்றும், மங்கல மல்லாத விஷயத்தை மறைமுக மங்கலச் சொல்லால் குறிப்பிடுவதற்கு 'மங்கலம்' என்றும் இலக்கணத்தில் வழங்குகின்றன. 'மங்கலம்' என்பதற்கு உதாரணம், 'தாலி அறுந்தது!' என்று சொல்வதற்குப் பதிலாகத் 'தாலி பெருகிற்று!' என்று சொல்வது. தமிழ்ப் பத்திரிகை நடைவழக்கில், 'மகா பாவிகள்' என்று சொல்ல வேண்டிய இடத்தில் 'புண்ணியவான்கள்' என்றும் 'மகா மூடர்கள்' என்று சொல்ல வேண்டிய சந்தர்ப்பத்தில் 'மகா மேதாவிகள்' என்றும் எழுதப்படுவதை மேற்படி இலக்கணத்துக்கு உதாரணமாகச் சொல்லலாம்!

பூகோள ராட்சதன்!

பள்ளிக்கூடங்களில் குழந்தைகளைச் சித்திரவதை செய்யும் இன்னொரு பயங்கர ராட்சதன் பூகோள ராட்சதன்.

பூகோள சாஸ்திரம் மிகவும் ரஸமான விஷயம். குழந்தைகளுடைய மனத்தைக் கவர்ந்து மேலும் மேலும் தெரிந்து கொள்ள வேண்டும் என்னும் ஆசையை மூட்டக் கூடியது.

பூகோள சாஸ்திரம் கற்பிப்பதற்குச் சாதாரணமாய்ப் புஸ்தகமே தேவையில்லை. சொல்லிக் கொடுக்கும் உபாத்தியாயருக்குத் தான் அவ்வப்போது ஞாபகப்படுத்திக் கொள்ளப் புஸ்தகம் தேவை. தேசப் படங்களையும், பூகோள உருண்டைகளையும் வைத்துக் கொண்டே குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுக்கலாம். "பூகோளப் பாடம் எப்போது வரும்?" என்ற ஆசை உண்டாகும்படி சொல்லிக் கொடுக்கலாம். அப்படிப் பட்ட விஷயத்தைப் பற்றி எழுதப்பட்டிருக்கும் பாட புத்தகங்களைப் பார்த்தால், "ஐயோ! நமது நாட்டுக் குழந்தைகள் என்ன பாவத்தைச் செய்தன, இப்படிப் பட்ட கொடுமையை அனுபவிக்க!" என்று தான் தோன்றும்.

"பூவர்ணனை" என்னும் பொதுத் தலைப்போடு முதல் புத்தகம், இரண்டாம் புத்தகம் மூன்றாம் புத்தகம் வெளியாகியிருக்கின்றன. இவையும் சென்னைக் கல்வி இலாகா வெளியிட்டுள்ள பாட திட்டத்திற்கு இணங்க எழுதப்பட்டவை. முதல், இரண்டாவது, மூன்றாவது பாரத்துக் குழந்தைகளுக்காக ஏற்பட்டவை.

இவற்றில் முதல் பாரத்துக்குரிய புத்தகத்தில், அதாவது பதினொரு வயதுக் குழந்தை படிக்க வேண்டிய புத்தகத்தில் ஆப்பிரிக்காக் கண்டம், தென் ஆஸ்திரேலியாக் கண்டம், தென் அமெரிக்காக் கண்டம் ஆகிய தேசங்களைப் பற்றிச் சுமார் 80 பக்கங்கள் வர்ணனை செய்யப்படுகிறது!

இந்தப் புத்தகத்தின் 80, 81-ம் பக்கங்களிலிருந்து இரண்டு பாராக்களை அவசியம் நேயர்கள் படிக்க வேண்டும்:

"தென் ஆப்பிரிக்காவின் முக்கிய துறைமுகமாகிய கேப்டவுனிலிருந்து வடக்கு நோக்கிப் போகும் முக்கிய இருப்புப் பாதை, தென் ரொடீஷியாவிலுள்ள புலவாயோ நகரத்திற்கும் பிறகு விக்டோரியா நீர் வீழ்ச்சிக் கருகில் ஸாம்பஸீ நதியின் குறுகிய இடுக்கைக் கடந்து வட கரையிலுள்ள வட ரொடீஷியாவின் முக்கிய பட்டணமாகிய லிவிங்ஸ்டனுக்கும் போகிறது."

"தென் கடற்கரையிலிருந்து சிறிய கரூ, பெரிய கரூ, பங் என்கிற படிகளைப் போலிருக்கும் பிரதேசத்தைத் தாண்டிப் பீட பூமியைச் சேரலாம். பீட பூமியின் தென் கிழக்கு விளிம்பு ஒரு மலைபோல் உயர்ந்தும் அங்கிருந்து மேற்காகச் செல்லச் சல்ல † பீட பூமிப் பிரதேசம் கொஞ்சம் தாழ்ந்தும் இருக்கிறது. டிரேக்கன்ஸ்பர்க் என்ற பெயருள்ள இந்த உயர்ந்த விளிம்பில் உற்பத்தியாகி ஆரேஞ்சு நதி மேற்கு நோக்கியும், ரொடீஷியாவிற்கும் தென்னாப்பிரிக்கா ஐக்கிய நாட்டிற்கும் மத்தியில் எல்லையாக லிம்போபோ என்னும் நதி கிழக்கு நோக்கியும் ஓடுகின்றன. இவ்விரண்டு நதிகளும் நைல் காங்கோ நதிகளைப் போல் அவ்வளவு முக்கியமானவை † யல்ல."

அவ்வளவு 'முக்கியமானவை' யல்ல; ஆனபோதிலும் நமது தமிழ் நாட்டில் பிறக்கும் துரதிர்ஷ்டத்தைச் செய்த குழந்தைகளுக்குப் பதினொரு வயதில் மூளையிலே திணிக்கும் அளவுக்கு முக்கியமானவை!

இன்னும் இரண்டு வருஷம் தாண்டி மூன்றாவது பாரத்தில் படிக்கும் 13 வயதுக் குழந்தைகளுக்குப் பாடமாய் வைத்திருக்கும் "பூவர்ணனை" மூன்றாம் புத்தகத்தையும் கொஞ்சம் பார்ப்போம். இதில் ஐரோப்பா கண்டத்தைப் பற்றி ஏறக்குறைய 70 பக்கமும், பிரிட்டிஷ் தீவுகளைப் பற்றி 30 பக்கமும் வர்ணனை நிறைந்திருக்கிறது.

† அச்சுப் பிழைகள் நம்முடையன அல்ல.

"வியங்கோள் வினை முற்றாக் குற்றியலுகரம் எத்தனாவது அட்சாம்சத்தில் பிறந்து எந்தெந்த நகரங்களின் வழியாக ஓடி வீசை ஒன்றுக்கு மூன்று அணா நாலு பென்ஸ் வீதம் கி. பி. எத்தனாவது வருஷம் மரண மடைந்தது?" என்று உபாத்தியாயர் கேள்வி கேட்பதாகப் பையனுடைய குழம்பிப் போன மூளையில் தோன்றுகிறது. பாவம்! பையன் என்ன பதிலைச் சொல்லுவான்?



வர்ணனை என்றால் எப்பேர்ப்பட்ட வர்ணனை! தயவு செய்து சில உதாரணங்களைப் படியுங்கள். தலையிலே கையை வைத்துக் கொண்டாவது பொறுமையுடன் படித்துப் பாருங்கள் :—

“60 வட அக்ஷாம்சத்திற்கு வடக்கிலும் ஸ்காண்டிநேவியா தீபகற்பத்தைக் காட்டிலும் இன்னும் கிழக்கிலும் அமைந்திருப்பதால் இங்கு வாயுநிலை மிகக் குளிராக இருப்பதோடு பல மாதங்கள் தரை பனி மூடியிருக்கும்.”

“அங்குள்ள புல் வெளிகளில் நடைபெறும் பாற்பண்ணைகளில் மாடுகளையும் பன்றிகளையும் கோழிகளையும் வளர்க்கிறார்கள்.” !!!

“ஸ்டூக்பாங், ஜெலிங்காம் முதலிய நகரங்களில் நெசவு வேலை, மின்சார யந்திரங்களைச் செய்தல் ஆகிய தொழில்கள் நடக்கின்றன.”

“கிங்கன், டன்டாப் என்னும் இரண்டு நகரங்களில் இரும்பு, எஃகு வேலைகளும், ஷோலிங்கன் நகரத்தில் கத்தி வகைகளும், பார்மன் - எல்பர்பீட் இரட்டைப் பட்டணத்தில் நெசவு வேலையும் நடைபெறுகின்றன.”

“பாரிஸுக்குக் கிழக்கிலுள்ள ஷாம்பேன்; தென் மேற்கிலுள்ள ஆக்விடேயின், தென் கிழக்கிலுள்ள ரோன்சோன் பள்ளத்தாக்கு ஆகிய பிரதேசங்கள் முக்கியமாகத் திராட்சை பயிரிடும் இடங்கள்.”

“அலெக்சாண்டிரியாவில் இருந்து தெற்கு நோக்கி கெய்ரோ, கார்ட்டூம், கிஸுமூ, மொம்பாசா, டாரெஸ்ஸலாம் நகரங்களின் வழியாகச் செல்லும் ஒரு முக்கிய மார்க்கம் கேப்டௌனில் முடிவு பெறுகிறது.”

“மேற்கில் லங்காஷயர், கம்பர்லாந்து ஆகிய இடங்களிலும் கிழக்கில் நார்தம்பர்லாந்து, யார்க்ஷயர், நாட்டிங்காம்ஷயர் ஆகிய இடங்களிலும், தெற்கில் வட ஸ்டாப்போர்ட்ஷயர், தென் ஸ்டாப்போர்ட்ஷயர் ஆகிய இடங்களிலும் இருக்கும் நிலக்கரிச் சுரங்கங்களெல்லாம் பென்னைன் பிரதேசத்தைச் சேர்ந்தவைகளே.”

“லாம்பார்டிச் சமவெளியின் கிழக்குப் பாகத்தில், போ நதியின் டெல்டாவிலிருந்து விலகி, அட்ரியாடிக் கடலின் தலைப்பில் ஒரு கழியில் ஏற்பட்ட வெனிஸ் நகரம்......”

மாணாக்கர்களின் மூளையில் நன்றாய்ப் பதியவேண்டு மென்பதற்காக ஆசிரியர் கருணை கூர்ந்து முக்கிய நகரங்கள், பிரதேசங்கள், நதிகள் முதலியவற்றின் பெயர்களைப் பெரிய எழுத்தில் அச்சிட்டிருக்கிறார்.

அப்படிக் குழந்தைகளின் மனதில் ஆழ்ந்து பதிய வேண்டிய பிரதேசங்கள், நகரங்கள் ஆகியவற்றின் பெயர்கள் இந்த ஒரு புத்தகத்தில் மட்டும் குறைந்த பட்சம் ஆயிரம் இருக்கின்றன!

மேலே எடுத்துக் காட்டி யிருக்கும் பாராக்களைப் பத்துத் தடவை படித்த பிறகு எத்தனை பெயர்கள் உங்களுக்கு நினைவிருக்கின்றன என்று பாருங்கள்.

ஆயிரம் பெயர்களை நினைவு வைத்துக் கொள்ளக் குழந்தைகள் எத்தனை தடவை படிக்க வேண்டி யிருக்கும், அதற்குள்ளே குழந்தைகளின் மூளை எவ்வளவு தூரம் வறளும் என்று யோசியுங்கள்.

மேற்படி “பூவர்ணனை”ப் புத்தகங்களைக் கையிலே வைத்துக்கொண்டு கேள்வி கேட்டால், நமது பதின்மூன்று மந்திரிகளையும், பதினாறு பார்லிமெண்டரி காரியதரிசிகளையும், சென்னை மாகாணத்திலுள்ள எல்லா பி. ஏ. பி. எல். களையும், அத்தனை ஐ. சி. எஸ். காரர்களையும் திணற அடிக்கலாம்!

பி. ஏ. எல். டி. கள் அவ்வளவு பேரையும் பேந்தப் பேந்த விழிக்கும்படி செய்யலாம்!

இந்தப் புத்தகம் எழுதிய ஆசிரியரையே பதில் சொல்ல முடியாமல் திணறித் திண்டாடும்படியாகச் செய்யலாம்!!

ஆயினும் சின்னஞ் சிறு குழந்தைகளுக்கு இத்தகைய புத்தகங்களைப் பாடமாக வைத்திருக்கிறார்கள்! இத்தகைய விஷயங்களைப் போதிக்க வேண்டுமென்று பாடத் திட்டம் வகுத்திருக்கிறார்கள்!

நமது குழந்தைகளை முட்டாள்களாக அடிப்பதற்கும், அவர்களுடைய மூளைகளை வறண்டு போகச் செய்வதற்குமே சதிசெய்த காரியமாகத் தோன்றுகிறதா, இல்லையா?


இலக்கணத்தையும், பூகோளத்தையும் இந்தக் கட்டுரையில் உதாரணங்களாகக் கையாண்டிருக்கிறோம். மற்ற எல்லாப் பாடங்களையும் ஏறக்குறைய இவ்வளவு லட்சணமாகத்தான் வகுத்திருக்கிறார்கள்.

இத்தகைய குப்பை கூளங்கள், கூழாங் கற்கள், இரும்பாணிகள், நெருஞ்சி முட்கள் ஆகியவற்றைக் குழந்தைகளின் மூளையில் திணிக்க வேண்டிய தில்லை யென்றால் பள்ளிக்கூடங்களில் மூன்று மணி நேர போதனை போதுமா, போதாதா?

* * *

குழந்தைகளிடம் கருணையுள்ள மனிதர்கள், புத்தியுள்ள மனிதர்கள், உண்மைக் கல்வி படைத்த மனிதர்கள், கல்வி இலாகாவுடன் எவ்வித சம்பந்தமும் இல்லாத மனிதர்கள் — ஆகியவர்களைக் கொண்டு, உடனே நமது பள்ளிக்கூடங்களின் பாட திட்டங்களைப் பரிசீலனை செய்யும்படி சொல்ல வேண்டும். படிப்பு என்ற பெயரால் குழந்தைகளைச் சித்திரவதை செய்யும் பயங்கரக் கொடுமையை உடனே நிறுத்தவேண்டும். கல்விச் சீர்திருத்தங்களுக்கெல்லாம் அடிப்படையான காரியம் இது. இதைச் செய்யாத வரையில் மற்ற எந்தச் சீர்திருத்தமும் எந்தவிதமான பயனையும் அளியாது.

வீட்டு சுகம்



ஆபீசில் கடுமையாக வேலை செய்து உடல் அலுத்து மனச் சோர்வு ஏற்படும் போது வீட்டுக்குச் சென்று ஒரு கப் டீ அருந்துவதற்கு சமமானது வேறெதுவுமில்லை. சோர்வை அகற்றி மனதுக்கு புது உற்சாகமளித்து, ஒரு மணி நேரத்தில் உங்களைப் பழைய மனிதனுக்குவது டீ தான். வேறு எந்த பானத்தாலும் இதைச் செய்ய முடியாது. பணக்காரர் ஏழையென்ற வித்தியாசமின்றி எல்லோருக்கும் சுகமளிக்கும் இந்த டீ மலிவானது. சரியான முறையில் தயாரிக்கப்பட்டால், நன்மையளிப்பதில் இணையற்றது.



நல்ல டீ தயாரிக்கும் முறை

1. கெட்டியில் டீ காய்ச்சக்கூடாது. டீ பாத்திரத்தை உபயோகியுங்கள்.
2. உலர்ந்த டீயை பாத்திரத்தில் போடும்போது பாத்திரம் ஈரமில்லாமல் இருக்கவேண்டும். அப்பொழுதுதான் நறுமணமுள்ள கஷாயம் கிடைக்கும்.
3. கப்புக்கு ஒரு டீ ஸ்பூன் விதமும் பாத்திரத்துக்காக ஒரு டீ ஸ்பூனும் டீ போடவும்.
4. புதிதாக காய்ச்சிய நீரையே உபயோகிக்கவும்; ஒரு தரம் காய்ச்சிய நீரையோ, அதிகமாகவோ அல்லது குறைவாகவோ காய்ச்சப்பட்ட நீரையோ ஒருபோதும் உபயோகிக்காதீர்கள். தள தள வென்று குமிழ்விட்டு கொதிக்கும் நீர் தான் சரியாக காய்ச்சின நீர்.
5. கஷாயம் இறங்க குறைந்தது 5 நிமிஷ கால நேரம் வேண்டும்.
6. பாத்திரத்தில் இருக்கையிலேயே பால் சர்க்கரை சேர்க்காதீர்கள். கப்புகளில் விட்ட பிறகு சேர்க்கவும்.

எந்த நேரமும் டீ அருந்தும் நேரம்

இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டாரால் வெளியிடப்பட்டது.


இந்தியத் தேயிலையில் மிகச் சிறந்தது
மிக நேர்த்தியான மணமும், நல்ல நிறமும், குறைந்த விலையும் உள்ள லிப்டன்ஸ் தேயிலை பெண் தேயிலைகள் இதர தேயிலைகளை விட சிறந்தவை.
LIPTON'S GIRL
FINEST DUST TEA
லிப்டன்ஸ்
தேயிலை பெண்
நேர்த்தியான இந்திய தேயிலை
LTK 84 O

கிரகலக்ஷ்மி

விந்தன்

(சென்ற வாரத் தொடர்ச்சி)

எங்கள் கடையில் தீப் பிடித்துக் கொண்டு விட்டதாம்!

அவ்வளவுதான்; என் மனோலோகத்தில் நானும் அக்கினி பகவானால் ஆட்கொள்ளப் பட்டுத் 'திருதிரு' வென்று எரிந்தேன்!

அப்பாவிடம் செய்தி சொல்வதற்காக நான் விரைந்து ஓடியபோது, என் கண்ணில் பட்ட ஒவ்வொரு பொருளும் தீப்பற்றி எரிவதாகக் காணப்பட்டது!

பரபரப்புடன் அப்பாவின் அறைக்குள் நுழைந்தேன்—ஐயோ! அவரும் தீப்பற்றி எரிந்து கொண்டிருக்கிறாரே!

"அப்பா! அப்பா!! அப்பா!!!"

"என்னடா, அது?"

"கடையில் தீப் பிடித்துக் கொண்டு விட்டதாம்!"

"ஹா!"

அடுத்த நிமிஷம், "ஐயோ! கையிருப்பு ரொக்கம்கூடக் கடையில்தானே வைத்திருந்தேன்!" என்று சொல்லிக் கொண்டே அவர் எழுந்து வெளியே ஓடினார்!

வாயிற்படியில் அந்தப் பாவி யமன் காத்துக் கொண்டிருந்தான் போலும்!—அவன் தன் பாசக் கயிற்றை வீசி இழுத்து விட்டான்; என் அப்பா வாயிற்படியில் தடுக்கி விழுந்து வாழா வரம் பெற்று விட்டார்!

அடுத்த நிமிஷம் நானும் உணர்விழந்து விழுந்தேன்.

அந்த நிலையில் நான் எவ்வளவு நேரம் இருந்தேனோ, தெரியாது. மீண்டும் உணர்வு பெற்றபின் என் அன்னை அழுது, அழுது ஓயும் தறுவாயில் இருந்தாள்.

அவளுடைய வெளுத்த முகத்தையும், வெறிச்சென்றிருந்த நெற்றியையும், கண்ணீர் பெருகிய கண்களையும் என்னால் பார்த்துச் சகிக்க முடியவில்லை; மெள்ள எழுந்து கடையின் பக்கம் சென்றேன்.

கருத்த சாம்பல் என் கண்களுக்குக் காட்சி யளித்தது. யாரோ கொடுத்த தகவலின்பேரில், தீயணைக்கும் இயந்திரங்கள் வழக்கம்போல் தீ அணைந்த பிறகு வந்து திரும்பிச் சென்றனவாம்!

★

எந்த விஷயத்திலும் பிறரை நம்பாத என் அப்பா, எங்கள் கடையை ஒரு காலணாவுக்குக்கூட 'இன்ஷ்யூர்' செய்து வைக்கவில்லை. அவருக்குப் பிறகு எனக்கும் என் அன்னைக்கும் ஜீவாதாரமாக இருந்த 'அசையாத' சொத்தெல்லாம் நாங்கள் குடியிருந்த வீடும், அந்த வீட்டின் பெறுமானமுள்ள கடனும்தான்!

ஒரு பக்கம் கவலையே உருவான என் தாய்; இன்னொரு பக்கம் கரைகாணாத சம்சார சாகரம்; மற்றொரு பக்கம் கடன்காரர்கள்! இவைகளுக்கு முன்னால் என்னுடைய கலாசாலை வாழ்க்கையின் கதி என்ன ஆகியிருக்கும் என்று சொல்லவா வேண்டும்?

கதை—கவிதையிலும், நடனம்—நாடகத்திலும், ஸினிமா—சங்கீதத்திலும் சென்று கொண்டிருந்த என் மனம், விறகு—அரிசி ரேஷனிலும், காய்கறி விலை வாசியிலும் செல்ல ஆரம்பித்தது.

பணக் கவலை என்னைப் படுத்திய பாடு கொஞ்ச நஞ்சமல்ல. நான் பார்த்து வந்த வேலைக்காக, பாக்கிக்காரர்கள் கொடுத்த மாதச் சம்பளம் ரூபாய் ஐம்பது போதவில்லை. வீட்டின் ஒரு பகுதியை வாடகைக்கு விடுவதென்று தீர்மானித்தேன். அன்றே TO LET என்று ஒரு அட்டையில் எழுதி வாயிற்படியில் தொங்க விட்டேன்.

காலை எழுந்தவுடன் வேலை; மாலை முடிந்தவுடன் தூக்கம்; மற்ற நேரங்களில் அன்னை விசாரம்; நடுநடுவே என் மனோவானத்தில் ரத்னாவின் வதன மின்னல்!—இந்த வாழ்க்கை இறைவனுக்கே பிடிக்கவில்லை போலிருக்கிறது. இல்லையென்றால், அவர் எங்கேயோ இருந்த ரத்னாவை எங்கள்

வீட்டில் ஏன் கொண்டு வந்து சேர்த்திருக்கப் போகிறார்?

ஆமாம்; நான் என் வீட்டு வாயிலில் TO LET போர்டு மாட்டிய ஒரு வாரத்திற்கெல்லாம் அவர்கள் குடி வந்து விட்டார்கள்.

அவளைச் சந்தித்த பிறகு, நான் என் தந்தையை இழந்து விட்டேன்; அவள் தாயை இழந்து விட்டாள்.

★

ஒரு நாள் ஏதோ பேச்சு வாக்கில், ரத்னாவின் தகப்பனாரை நோக்கி, "நீங்கள் இரண்டாந் தாரம் கல்யாணம் செய்து கொள்ள வில்லையா?" என்று கேட்டாள் என் தாயார்.

அவர் சிரித்துக் கொண்டே, "இப்பொழுது ரத்னாவிற்கு மாப்பிள்ளை தேடிக் கொண்டிருக்கிறேன்; அவளுக்குக் கல்யாணமான பிறகு, நீலிக்கும் ஒரு மாப்பிள்ளையைத் தேடிப் பிடித்துக் கல்யாணம் செய்து விட்டு, நானும் இரண்டாந் தாரமாக யாரையாவது பார்த்துக் கல்யாணம் செய்து கொள்ளலாமென்று இருக்கிறேன்!" என்றார்.

"ரத்னாவுக்கு இந்த வருஷமே கலியாணம் செய்யப் போகிறீர்களா?" என்று அம்மா கேட்டாள்.

"செய்ய வேண்டியதுதான்; ஆனால் வெறும் கையுடன் இருக்கும் என்னைத் தேடி வந்து யார் சம்பந்தம் செய்து கொள்ளப் போகிறார்கள்?"

இப்படிச் சொல்லும்போது அவருடைய கண்களில் நீர் துளித்தது.

அதற்கு மேலும் தொடர்ந்து பேசி அவரைத் தொந்தரவு செய்ய அம்மாவுக்கு விருப்பமில்லை; உள்ளே வந்து விட்டாள். இதுதான் சமயமென்று நான் என்னுடைய அபிப்பிராயத்தை அவளிடம் தெரிவித்தேன்; ரத்னாவைக் கல்யாணம் செய்து கொள்ளும் விஷயமாகத்தான்.

அதைக் கேட்ட மாத்திரத்தில் அம்மா ஏதோ சர்ப்பம் தீண்டியவளைப் போல் திடுக்கிட்டு என்னை விழித்துப் பார்த்தாள். எனக்கு ஒன்றும் புரியவில்லை. "என்ன அம்மா?" என்று கேட்டேன்.

"என்னவா? நாளைக்கே அவர்களை இந்த வீட்டை விட்டுக் காலி செய்து விட்டுத்தான் மறு வேலை!" என்று உறுமினாள்.

இதென்ன வம்பு?

"அம்மா! அந்தப் பெண்ணை நான் கலியாணம் செய்து கொள்வது தங்களுக்குப் பிடித்தமில்லையென்றால் அத்துடன் அதை விட்டு விடுங்கள்; நானும் விட்டு விடத் தயார். ஆனால், அதற்காக இந்த வீட்டை விட்டு அவர்களைக் காலி செய்யவோ, அவர்களிடம் கடுமையாக நடந்து கொள்ளவோ வேண்டாம்!" என்று கெஞ்சு கெஞ்சு என்று கெஞ்சினேன்.

அதற்குப் பிறகு அம்மா சிறிது சமாதானமடைந்து, "ஏற்கனவே கெட்டது போதாதென்று இன்னுமா கெட்டுப்போகப் பார்க்கிறாய்? நம்மைவிட மேலான இடம் எத்தனையோ நாட்களாகக் காத்துக் கொண்டிருக்கிற போது, அதை விட்டு விட்டு ஏன் இப்படியெல்லாம் உளறுகிறாய்?" என்றாள்.

ஆமாம்; ராணியை மனதில் வைத்துக் கொண்டுதான் அம்மா அவ்விதம் சொன்னாள்.

அத்துடன் நின்றுவிட வில்லை; மறுநாளே என்னிடம் சொல்லிக் கொண்டு ராணியின் வீட்டுக்குக் கிளம்பினாள்.

★

அன்று மாலை நான் ஆபீஸிலிருந்து வீட்டுக்குத் திரும்பியபோது, அம்மா ஏனோ அசோகவனத்துச் சீதையைப்போல் காட்சி அளித்தாள்!

"என்ன, அம்மா?" என்றேன்.

நான் இப்படிக் கேட்டதுதான் தாமதம்; அம்மாவின் கண்கள் தாரை தாரையாகக் கண்ணீர் வடித்தன.

நான் வெலவெலத்து நின்றேன்.



"என்ன, அம்மா! என்ன நடந்தது?" என்று பரபரப்புடன் கேட்டேன்.

அம்மா விக்கலுக்கும் விம்மலுக்கும் இடையே, "ஆயிரந் தடவை நம் வீடு தேடி வந்து, 'எங்கள் ராணியை விட்டுவிட்டு உங்கள் பிள்ளைக்கு வேறு எங்கேயும் பெண் பார்த்துவிடக் கூடாது!' என்று ஒற்றைக் காலால் நின்றார்களே, இப்பொழுது என்ன சொல்கிறார்கள், தெரியுமா? உன்னுடைய கலியாணப் பேச்சை எடுத்ததும், 'உன் பிள்ளைக்கா எங்கள் ராணி வேண்டும்?' என்று எகத்தாளமாகச் சொல்லி, எல்லோருமாகச் சேர்ந்து குலுங்கக் குலுங்கச் சிரிக்கிறார்கள். உனக்குச் சம்பளம் ஐம்பது ரூபாயாம்; அவர்கள் தங்கள் மோட்டார் டிரைவருக்கே மாதம் எழுபத்தைந்து ரூபாய் சம்பளம் கொடுக்கிறார்களாம்! ஹேர் ஆயில், டாய்லெட் சோப், க்ரீம் இன்னும் என்ன வெல்லாமோ — இவற்றுக்கே ராணிக்கு மாதம் நூறு ரூபாய்க்கு மேல் செலவழிந்து விடுகிறதாம்! 'வேண்டுமானால் உன்னுடைய பிள்ளைக்கு வேறு நல்ல இடமாகப் பார்த்துக் கல்யாணம் செய்து வைக்கிறோம்' என்கிறார்கள்!—என் வயிறு பற்றி எரிகிறது! என்ன காலம் இது? நமக்கு வந்த கதி அவர்களுக்கும் வாராதா?......" என்றெல்லாம் சாபம் கொடுக்க ஆரம்பித்து விட்டாள்.

"வேண்டாம் அம்மா, வேண்டாம். அவர்களுக்கும் இந்த கதி வரவேண்டாம்; நல்லதைத்தான் அவர்கள் சொல்கிறார்கள்; நன்றாயிருக்கட்டும்!" என்றேன் நான்.



ஆமாம்; அவர்கள் சொல்வதும் ஒரு விதத்தில் உண்மைதானே? — ஐம்பது ரூபாய்ச் சம்பளத்தில் நான் அந்த 'ராங்கிக் காரி'யைக் கலியாணம் செய்து கொண்டு எவ்வாறு காலந் தள்ள முடியும்?

இந்த உண்மையை அறியாத என் தாய் மனோ வியாகூலத்தால் இரண்டு நாட்களுக்கெல்லாம் படுக்கையாய்ப் படுத்துவிட்டாள். வாழ்க்கையில் அவள் வைத்திருந்த கடைசி ஆசை, எப்படியாவது ராணியை எனக்குக் கலியாணம் செய்து வைத்துவிட வேண்டும் என்பதுதான். அது முறிந்து விடவே, அவள் ஹிருதயம் தாங்க முடியாத அதிர்ச்சி அடைந்து விட்டது.

ரத்னு!—அவள் ஏழை என்ற ஒரே ஒரு குறையைத் தவிர வேறு ஒரு குறையும் இல்லாதவள். அந்தக் குறைக்குக் கூட காரணம் அவள் அல்ல; அந்த எல்லாம் வல்ல இறைவன், ஏழை பங்காளன்தான்! அந்தக் குறையைக் காரணமாக வைத்துக் கொண்டுதானே நேற்று அம்மா அவளைத் தட்டிக் கழித்தாள்! அதேபோல்தான் என்னையும் ஏழை என்பதற்காக அவர்கள் தட்டிக் கழிக்கிறார்கள்!

அளவிலா அதிர்ச்சியடைந்து அம்மா உடம்பைக் கெடுத்துக் கொண்டு விட்டாள். இப்பொழுது அவதிப்படுவது யார்? நான் என் அம்மாவின் அருகில் இருந்து கொண்டு சிசுருஷை செய்து கொண்டிருந்தால் சம்பளம் கொடுப்பவன் சும்மா யிருப்பானா?

எனக்கு ரொம்பவும் தர்ம சங்கடமாகப் போய்விட்டது. அம்மாவோ நாளுக்கு நாள் அப்படி யிப்படி நகர முடியாதவளாகி விட்டாள். இந்த நிலையில் அவளை விட்டு விட்டு நான் எப்படி வேலைக்குச் செல்வது?

இந்த எண்ணத்துடன் அன்று நான் வேலைக்குப் போகும் சமயத்தில், திருதிரு வென்று விழித்துக் கொண்டிருந்தேன். அம்மா என்னுடைய நிலையை ஒருவாறு உணர்ந்தவளாய், "அப்படி ஒன்றும் என் உடம்புக்கு வந்து விடவில்லை; நீ வேலைக்குப் போடா!" என்றாள்.

நானும் போக மனமின்றிப் போய்விட்டேன். ஆனாலும் மனதில் நிம்மதி யில்லை. அன்றே ஒரு வாரம் லீவுக்கு விடை பெற்றுக் கொண்டு வீட்டுக்கு வந்தேன்.

சமையல் அறையில் யாரோ நடமாடும் சத்தம் கேட்டது.—என்ன! அம்மாவுக்கு

அதற்குள் உடம்பு சுகமாகி விட்டதா? இல்லை; என்னுடைய காலடிச் சத்தம் கேட்டதும், ரத்னாதான் சமையலறையிலிருந்து ஓடோடியும் வந்து தன் வீட்டிற்குள் புகுந்து கொண்டாள்!

நான் கோட்டைக் கழற்றி மாட்டிவிட்டு அம்மாவின் அருகில் உட்கார்ந்தேன். சீலி டச் சுடக் காப்பியைக் கொண்டு வந்து என் எதிரே வைத்தாள். நான் அதை விழித்துப் பார்த்தேன். அம்மா, "சாயங்காலம் வந்ததும் காப்பி சாப்பிடுவது வழக்கமாச்சே, இன்று ஏமாந்து விடுவாயே என்று நான்தான் ரத்னாவைக் கூப்பிட்டுக் கொஞ்சம் காப்பி போட்டுக் கொடுக்கச் சொன்னேன்!" என்று சொல்லி என் சந்தேகத்தை நிவர்த்தி செய்தாள்.

"அது சரி, உனக்கு உடம்பு எப்படியிருக்கிறது, அம்மா!" என்றேன்.

"என் உடம்புக்கு என்னடா, அதெல்லாம் ஒன்றுமில்லை. நீ காப்பி சாப்பிடு!"

நான் காப்பி சாப்பிட்டுக் கொண்டே, "நாளையிலிருந்து ஒரு வாரம் லீவ் எடுத்துக் கொண்டு விட்டேன், அம்மா!" என்றேன்.

"என்னத்துக்கு?"

"எத்தனை நாளைக்குத்தான் பேசாமலிருப்பது? உன்னை டாக்டர் வீட்டுக்குக் கூட்டிக் கொண்டு போக வேண்டாமா?"

"அதற்கா ஒரு வாரம்?"

"நாளுக்கு நாள் உனக்கு எப்படி எப்படியெல்லாம் இருக்குமோ? உன்னைக் கவனித்துக் கொள்ள வேறு யார் இருக்கிறார்கள், அம்மா?"

"ஏன் இல்லை? பகவான் என்னை அப்படியெல்லாம் அனாதையாக விட்டுவிடவில்லை. அவர்தான் ரத்னாவை இந்த வீட்டுக்கு அனுப்பி வைத்திருக்கிறாரே? — இன்றைக் கெல்லாம் வெந்நீருக்கும் வேறு காரியங்களுக்குமாக ஆயிரம் தடவை அவளைக் கூப்பிட்டிருப்பேன், கொஞ்சமாவது அலுத்துக் கொண்டாள் என்கிறாயா? ஊஹூம் — என்ன அடக்கம், என்ன குணம்! சொந்த நாட்டுப் பெண் கூடக் கெட்டாள், போடா ......!"

எனக்கு உச்சி குளிர்ந்து விட்டது. அவளைப் பற்றியே இன்னும் ஏதாவது அம்மா சொல்லிக் கொண்டிருக்க மாட்டாளா என்று எதிர்பார்த்து உட்கார்ந்தேன்.

"என்னமோ, அவளுக்கு எல்லா பாக்கியமும் கொடுத்த கடவுள், ஐசுவரிய பாக்கியத்தான் கொடுக்கவில்லை. ஏதாவது நல்ல இடமாகக் கிடைக்க வேண்டும்; போகிற இடத்திலாவது அவள் நன்றாயிருக்க வேண்டும்!"

எப்படியிருக்கிறது, கதை?—எதற்காக அம்மா என்னை இப்படியெல்லாம் சோதிக்கிறாள்? — உடனே எப்படியாவது அந்த இடத்தை விட்டு நகர வேண்டுமென்று எனக்குத் தோன்றிற்று. ஆகவே, "எனக்குத் தெரிந்த வரையில் ராத்திரி சாப்பாட்டுக்கு ஏதாவது தயார் செய்கிறேன், அம்மா!" என்று எரிச்சலுடன் சொல்லி விட்டு எழுந்தேன்.

"உனக்கு என்னடா தெரியும்? நான் ரத்னாவைக் கொஞ்சம் சமைத்துக் கொடுக்கும்படி சொல்லுகிறேன்."

நான் அதை லட்சியம் செய்யவில்லை. "ரத்னா வேண்டாம்; அவளுடைய சமையல் மட்டும் வேண்டுமாக்கும்!" என்று எண்ணிக் கொண்டே, நான் சமையலறைக்குள் சென்று இரண்டு விறகை எடுத்து அடுப்பை மூட்ட யத்தனித்தேன். அந்த வாரம் வாங்கிய கால் புட்டி மண்ணெண்ணெய் வீணானதுதான் மிச்சம்!—விசிறிப் பார்த்தேன்; ஊஹூம்! — ஊதுகுழலை எடுத்து ஊதிப் பார்த்தேன்—ஆமாம்; நான் எவ்வளவுக் கெவ்வளவு ஊதினேனோ, அவ்வளவுக் கவ்வளவு புகைதான் கப்பிக்கொண்டு வந்தது!

கண் எரிச்சல் தாங்காமல் கண்ணீரைத் துடைத்துக் கொண்டே வெளியே வந்தேன். யாரோ என்னைப் பார்த்துக் 'கலீ' சென்று சிரிக்கும் சத்தம் கேட்டது. சிரித்தவள் அவள்தான்!—ஆனால், நான் கவனிப்பதற்குள் அவள் தலையைக் கவிழ்ந்து கொண்டே எங்கள் சமையலறைக்குள் நுழைந்து விட்டாள்! — அடுத்த நிமிஷம் அந்தப் பாழாய்ப்போன அடுப்பு பிரமாதமாகப் பற்றி எரிந்து கொண்டிருந்தது!

இந்த சந்தர்ப்பத்தில் நாங்கள் பேசிக் கொண்டதை நினைத்தால், இன்றும் எனக்குச் சிரிப்புச் சிரிப்பாய் வருகிறது. முன்பின் எங்கள் வீட்டுக்கு வந்து பழக்கமில்லாதவளாதலால், "அரிசி எங்கே இருக்கும்?" என்று அவள் தனக்குத்தானே கேட்டுக் கொள்வாள்.

அதற்குப் பதிலாக நான் அரிசி இருக்கும் இடத்திற்குச் சென்று, "இங்கேதான் இருக்கும்!" என்று எனக்கு நானே சொல்லிக் கொள்வேன்.

"இங்கே கரண்டியைப் பார்த்தாயா, சீலி?" என்பாள் அவள். — நானும் சீலி

அங்கே இருப்பதாகப் பாவித்துக் கொண்டு, "இதோ, இங்கேதான் இருக்கிறது, நீலி!" என்பேன்.

அம்மாவின் உடம்பு சௌகரியமாகும் வரை இப்படித்தான் எங்கள் 'உதவி நாடகம்' நடந்து வந்தது.

*

மறு நாள் அம்மாவை டாக்டர் வீட்டுக்குக் கூட்டிக் கொண்டு சென்றேன். அவர், அப்படி ஒன்றும் பிரமாதமான வியாதியில்லை யென்று சொல்லி, ஆறு வேளை மருந்து கொடுத்தார். வீட்டுக்கு வந்தால், நாங்கள் கொஞ்சமும் எதிர்பாராத அதிசயம் ஒன்று எங்களுக்காகக் காத்துக் கொண்டிருந்தது. யாரோ அம்மாவுக்கு உடம்பு சரியில்லை என்று சொல்லக் கேட்டு, அவளைப் பார்த்து விட்டுப் போவதற்காக அத்தையும் ராணியும் வந்திருந்தார்கள்!—பட்டும் ஜரிகையும் மின்ன, பொன்னும் மணியும் குலுங்க, வைரக் கற்கள் ஜொலிக்க நாலு பேருக்கு முன்னால் 'கிரீச்' சென்று காரில் வந்து இறங்க வேண்டுமென்றால், ஏதாவது ஒரு சந்தர்ப்பம் வேண்டித்தானே இருக்கிறது?

ராணி என்னைக் கண்டதும் அன்றுபோல் இன்று கை குலுக்கவில்லை; அதற்குப் பதில் ஒரு அலட்சியப் புன்னகை புரிந்தாள்.

அத்தையைக் கண்டதும் அம்மா முகத்தைத் திருப்பிக்கொண்டு, "ரத்னு! கொஞ்சம் வெந்நீர் கொண்டு வாயேன்!" என்று சொல்லிக்கொண்டே, தன் படுக்கையில் குப்புறப் படுத்துக் கொண்டாள்.

"உடம்புக்கு என்ன, மன்னி?" என்று அத்தை கேட்டதற்கு அவள் ஒன்றுமே பதில் சொல்லவில்லை.

இந்தச் சமயத்தில் அம்மாவின் அறைக்குள் நுழைந்த நான், "அம்மா! ஒரு வேளை மருந்து சாப்பிட்டுவிட்டுப் படுத்துக்கொள்!" என்று அவளை எழுப்பினேன்.

வண்டியில் சென்று வந்த அலுப்பில் அவள் கொஞ்சம் சிரமத்துடன் எழுந்து உட்கார்ந்தாள். நான் ஒரு 'அவுன்ஸ்' மருந்தை அவள் வாயில் ஊற்றினேன்.

அவ்வளவுதான்; அம்மாவுக்குக் குமட்டிக் கொண்டு வந்து விட்டது; வாயிலெடுத்து விட்டாள். அச்சமயம் அருகில் நின்று கொண்டிருந்த ராணியின் மீது கொஞ்சம் உமிழ்நீர் தெறித்து விழுந்து விட்டது!

உடனே அவள் முகத்தைச் சுளித்துக் கொண்டு, "சீச்சீ! இதென்ன, சுத்த 'நியூஸென்ஸ்'!" என்று எரிந்து விழுந்து கொண்டே அப்பால் சென்று விட்டாள்.

அம்மா அவளை வெறித்துப் பார்த்தாள்!

அதற்குள் வெந்நீர் எடுத்துக் கொண்டு வந்த ரத்னு, கருணையே வடிவாய் அம்மாவின் வாயைத் துடைத்து அவளை மெள்ள இறக்கிக் கீழே விட்டுவிட்டு, படுக்கையைச் சுத்தம் செய்ய ஆரம்பித்து விட்டாள்!

அதே நிமிஷத்தில் அம்மாவின் வறண்ட வதனத்தில் என்றுமில்லாத ஜீவகளை தோன்றியது. அளவற்ற ஆசையுடன் அவள் தட்டுத் தடுமாறி எழுந்து ரத்னுவை இறுகத் தழுவிக் கொண்டாள்.

நாணமும் கவலையும் ஒருங்கே தோய்ந்த முகத்துடன், "வேண்டாம் மாமி, வேண்டாம்! உடம்பை வீணாக அலட்டிக் கொள்ளாதீர்கள்!" என்று எச்சரித்துக் கொண்டே, படுக்கையைச் சுருட்டி எடுத்துக் கொண்டு குழாயடிக்குச் சென்றாள் ரத்னு.

இந்தச் சமயத்தில் ஒன்றும் புரியாதவளாய் நின்று கொண்டிருந்த என் அத்தை, "யார் இவள்?" என்று கேட்டாள்.

"இவளா? இந்த 'நியூஸென்ஸ்'காரிக்கு மருமகளாக வரப்போகிறவள்!" என்றாள் அம்மா ஆத்திரத்துடன்.

அத்தையின் முகத்தில் அசடு வழிந்தது.

ராணி ஏதோ அலட்சியத்துடன் முணுமுணுத்துக் கொண்டே வெளியே சென்று விட்டாள்.

அவளைப் பின்பற்றி, "மன்னிக்கு உடம்பும் சரியாயில்லை; மனமும் சரியாயில்லை!" என்று சொல்லிக் கொண்டே அத்தையும் நழுவி விட்டாள்!

அதே சமயத்தில் ஏதோ காரியமாக ரத்னுவைக் கூப்பிட்டுக் கொண்டே கூடத்துக்கு வந்த அவளுடைய தகப்பனாரிடம், "இந்தாங்கோ, இனிமேல் நீங்களும் நாங்களும் வெவ்வேறு குடும்பத்தைச் சேர்ந்தவர்களல்ல; எல்லாம் ஒரே குடும்பந்தான்! இதோ நிற்கிறானே என் பிள்ளை, அவன்தான் இனி உங்கள் மாப்பிள்ளை; ரத்னுதான் என் கிருஹலக்ஷ்மி!" என்றாள் அம்மா.

நானும் ரத்னுவும் எங்களுடைய மனோரதத்தில் ஏறி, சந்திர மண்டலத்தை நோக்கிப் பிரயாணம் செய்ய ஆரம்பித்தோம்.

ஒட்டகம்



ஒட்டகத்தை முதல் முதலில் பாலர் வகுப்புப் பாடப் புஸ்தகத்தில் பார்த்தேன். ஐயர் படத்துக்கும் ஓடப் படத்துக்கும் நடுவே அது நின்று கொண்டிருந்தது. அந்த வயதில், அணில், ஆடு, இறகு முதலியவற்றைப் புஸ்தகத்துக்கு வெளியே அசல் ரூபத்திலேயே பார்த்திருந்தேன்; அசல் ஒட்டகத்தை மாத்திரம் பார்த்ததில்லை.

அயலூர்களிலிருந்து எங்கள் வீட்டுக்கு வந்த பந்துக்களையெல்லாம், அவரவர் ஊர்களில் ஒட்டகை உண்டா என்று கேட்டேன்; ஒருவராவது உண்டு என்று சொல்லவில்லை. அக்கம் பக்கத்து ஊர்களுக்கு நான் செல்ல நேர்ந்தபோதெல்லாம், அந்தந்த ஊர்களில் ஒட்டகை உண்டா என்று தேடிப் பார்த்தேன்; நிறைய ஒணான்களைப் பார்த்தேனே தவிர ஒட்டகம் ஒன்றையும் பார்க்கவில்லை.

ஒட்டகத்தைக் காணவே முடியாதோ என்று ஏங்கிக் கொண்டிருந்த சமயத்தில் நானிருந்த ஊருக்கு சங்கராச்சாரியார் வந்தார்; அவருடன் ஒட்டகை ஒன்றும் வந்தது. எல்லோரும் பந்தலுக்கு உள்ளே மத குருவை தரிசித்துக் கொண்டிருந்தபோது, நான் மாத்திரம் பந்தலுக்கு வெளியே ஒட்டகத்தைப் பார்த்துக்கொண்டிருந்தேன். எல்லோரும் பீடாதிபதியின் உபதேசங்களைக் கேட்டுக் கொண்டிருந்தபோது, நான் மாத்திரம் ஒட்டகம் அசை போடுவதை அண்ணாந்து பார்த்துக் கொண்டிருந்தேன். பள்ளிக்கூடம் போகாமல் மட்டம் போட்டுவிட்டு, ஒட்டகத்தைச் சுற்றிச் சுற்றி வந்துகொண்டிருந்தேன். ஓரணாக் கொடுத்தால் அதன்மேல் ஏறி ஒரு நிமிஷம் சவாரி செய்யலாம் என்று பாகன் சொன்னான். அதன்படியே மறுநாளும் அதற்கு மறுநாளும் சவாரி செய்தபோது, அச்சத்தையும் ஆனந்தத்தையும் கலந்து அனுபவித்தேன்.

ஒரு வாரம் கழித்து ஒட்டகம் சென்றுவிட்டது. சென்ற பிறகும் வெகு நாள் வரை என் மனசு அதன்மீதேதான் சென்று கொண்டிருந்தது. ஒட்டகம் மாதிரி நடக்கிறேன் பார் என்று, முன்னங் கால்களை ஊன்றி நடந்து காட்டுவேன். ஒட்டகம் மாதிரிச் சாப்பிடுகிறேன் பார் என்று, சாப்பாட்டை அசை போட்டு மென்று காட்டுவேன். ஒட்டகம் மாதிரி தண்ணீர் குடிக்கிறேன் பார் என்று பெரிய செம்பு நிறையத் தண்ணீர் எடுத்துக் குடித்துக் காட்டுவேன். இதையெல்லாம் பார்த்த என் தாயார், ''சதா ஒட்டகத்தையே நினைத்துக் கொண்டிருந்தால், அடுத்த ஜன்மத்தில் ஒட்டகமாய்ப் பிறப்பாய்!'' என்று சொன்னாள். நல்லதாய்ப் போச்சு, ஒட்டகமாய் இருந்தால் பள்ளிக்கூடப் போக வேண்டிய தொல்லை இருக்காது என்று நினைத்துக் கொண்டேன்.

இதெல்லாம் அந்தக் காலத்தில். இப்போதோவெனில், ஒட்டகத்தைத் துளிக்கூட மதிப்பதில்லை; வெறுக்கவே செய்கிறேன் என்றுகூடச் சொல்லலாம். ஏனெனில், இந்த டெல்லிப் பட்டணத்தில் ஒட்டகங்கள் கழுதைகள் மாதிரித் தெருத்தெருவாய்த் திரிகின்றன; மந்தை மந்தையாய் மேய்ந்து கொண்டிருக்கின்றன; வரிசை வரிசையாய்ப் பார வண்டிகளை இழுத்துச் செல்கின்றன.

ஒட்டகத்தைப் பற்றி இன்று நான் கொண்டிருக்கும் அபிப்பிராயம் இதுதான் :—ஒட்டகம் உயரமாக இருந்தபோதிலும் மட்டமான மிருகமே. மூளையில்லாவிட்டாலும் கர்வத்துக்குக் குறைவில்லை. மற்றெல்லா மிருகங்களையும் விடத் தான்தான் உயரம் என்ற கர்வத்துடன், நாடகமேடை ராஜா நடை போடுவதுபோல நடந்து செல்கிறது. அதன் கோணல் முதுகில் ஏறிச் சவாரி செய்ய, கொள்ளைப் பணம் கொடுத்தாலும் சம்மதிக்க மாட்டேன். அது பாலைவனத்துக்கு லாயக்கே தவிர பட்டண வாசத்துக்கு லாயக்கில்லை.

கட்டுரையை இதுவரை விளையாட்டுப் போக்கில் எழுதிய பிறகு, மேலே 'ஸீரிய'ஸாக எழுத வேண்டும் என்று நினைத்தேன். அப்படி எழுதுவதற்கு உதவியாகச் சில குறிப்புக்கள் எழுதிக் கொண்டேன் :— ஒட்டகம் தொன்றுதொட்டு இந்நாட்டில் வசித்து வந்



இருக்கும் மிருகமல்ல — கைபர் கணவாய் வழியாக வந்தது — ஒட்டகத்தைப் பின்பற்றி மற்றும் பல அன்னியர்களும் வந்தார்கள் — ஆரியர்களில் ஒரு பகுதியினர் இக்கணவாய் வழியே பிரவேசித்திருக்கலாம் — ஜொராஸ்டர் மதத்தினர் (பார்ஸிகள்) பாரஸீகத்திலிருந்து புகலிடம் தேடி வந்தார்கள்—அலெக்ஸாந்தர் படையெடுத்து வந்தான்—கஜினி முகம்மது வந்து கொள்ளை யடித்தான்—அதன் பிறகு நடந்த படையெடுப்புக்கள்—புதிய பாஷைகள் புகுந்தது — கலைகளும் பழக்க வழக்கங்களும் பரவியது—ரோஜா மலரும் ரோஜாவைப் போன்ற அழகிகளும் குடி கொண்டது—ஒட்டகமும் கைபர் கணவாயும் இல்லாம லிருந்திருந்தால், இந்தியாவின் சரித்திரம் எப்படி இருந்திருக்கும்? ... .

இந்தக் குறிப்புக்களை விவரித்துக் கட்டுரையை மேலே மேலே கட்டிக் கொண்டு போகலாம் என்று நினைத்தேன். ஆனால், ஒரு சந்தேகம் ஊடே வந்து விட்டது. "ஒட்டகம் உண்மையிலேயே அன்னிய மிருகந்தானா?" என்பதுதான் அந்தச் சந்தேகம். யானையைப் போலவும் புலியைப் போலவும், ஒட்டகமும் ஆதி முதலே இந்தியாவில் வாழ்ந்துவரும் மிருகந்தான் என்று யாரேனும் சாதித்தால் என்ன செய்வது என்று பயந்தேன். ஆகவே விஷயம் அறிந்தவர்களை விசாரித்தேன். அவர்கள் சொன்ன தகவல்களாவன :—

சம்ஸ்கிருதப் பண்டிதர் :— சம்ஸ்கிருத பாஷையில் ஒட்டகம் என்று சொல்லப்படுகிற மிருகத்துக்கு "ஒஷ்ட்ரம்" என்பதாகத் தானே ஒரு பதம் இருக்கிற படியினாலே, சம்ஸ்க்ருதம் ஜீவபாஷையாக இருந்த காலத்தில் ஒட்டகம் பரதக் கண்டத்தில் இருந்திருக்க வேணும் என்றாகிறது. ஆனாலும், பாரத யுத்தத்தில் கஜமும் அச்வமும் சாதனங்களாய்ப் பிரயோகப் பட்டிருக்க, ஒஷ்ட்ரத்தைப் பற்றிப் பிரஸ்தாபமே இல்லை.



பண்டைய சரித்திர ஆராய்ச்சிக்காரர் :— ஐரோப்பாவிலோ வேறு எங்கேயோ, ஒட்டகத்தின் பாஸில் (Fossil) கண்டெடுக்கப் பட்டதாக, எப்போதோ ஏதோ ஒரு புஸ்தகத்திலோ அல்லது பத்திரிகையிலோ படித்ததாக, அரைகுறையாய் ஞாபகம் இருக்கிறது.

பயாலஜி படித்தவர் :—ஒட்டகமானது, ஆர்ட்டியோ டாக்டிலா என்ற வகையில் காமெலஸ் என்ற இனத்தைச் சேர்ந்த நாலு கால் மிருகம். இரண்டு விதப்பட்ட காமெல்கள் உண்டு. முதுகில் ஒரே ஒரு மேடு உடையது அரேபியன் காமெல்; இரண்டு மேடுகள் உடையது பாக்ட்ரியன் காமெல். அரேபியன் காமெலின் தாயகம் அரேபியா. பாக்ட்ரியன் காமெலின் தாயகம் மங்கோலியா. ஒட்டகத்தைப் பற்றிய சயன்ஸ் சர்ச்சைகளில் இண்டியன் காமெலை நான் கண்டதில்லை.

யாத்ரீகர் :—காசி முதல் கன்யாகுமரி வரை க்ஷேத்ராடனம் செய்திருக்கிறேன். ஒரு ஆலயத்திலாவது ஒட்டக வாகனமோ சிற்பமோ பார்த்ததில்லை.

இன்னும் பலர் பலவிதமாக அபிப்பிராயம் கூறினார்கள். அவர்கள் பேச்சைக் கேட்டுச் சந்தேகம் வலுவடைந்ததே தவிர, நிவர்த்தியாகவில்லை. ஆகவே, ஒட்டகத்தைப் பற்றி 'ஸீரிய'ஸாக எழுத நினைத்ததை விட்டு விடுகிறேன்.

காதலும் கருப்பையாவும்

சின்ன அண்ணாமலை

"ஏண்டா, இவ்வளவு நேரம் சாப்பாடு கொண்டு வர?"

"வழியில் தங்களுக்கு ஒரு கடிதம்..."

"அதென்ன கடிதம்?"

"ஸார்! கோபித்துக்கொள்ள மாட்டீர்களே?"

"ஏன் கோபித்துக் கொள்ளுகிறேன், கடிதத்தைக் கொடு, பார்ப்போம்!"

இவ்வாறு சங்கரப்பதிக் கோட்டை சப்-ஜெயிலில் எனக்கும் சாப்பாடு கொண்டு வரும் பையனுக்கும் இடையே பேச்சு நடந்தது.

* * *

தேசபக்தியின் காரணமாகச் சிறைப்பட்டிருக்கும் வீர இளைஞர் ஐராவதம் அவர்களுக்கு, நமஸ்காரம்.

தாங்கள் சில தினங்களுக்கு முன் ஜவாஹர் மைதானத்தில் செய்த பிரசங்கத்தை அடியாள் கேட்கும்படியான பாக்கியம் கிடைத்தது. "வீரப் பெண்களே, வெளியில் வாருங்கள்; வீழ்ந்த நாட்டை மீட்க வாருங்கள்" என்று தாங்கள் அன்று பாரத நாட்டுப் பெண்கள் அனைவரையும் கூவி அழைத்தீர்கள். அன்றைய தினத்திலிருந்து "நாமும் ஏன் தேச சேவை செய்யக்கூடாது?" என்ற எண்ணம் எனது உள்ளத்தில் சுற்றிச் சுற்றி வட்டமிட்டு வருகிறது. ஆனால் தங்களுக்குத் தெரியும், நமது சமூகத்தில் ஒரு பெண் தன் இச்சைப்படி ஒன்றும் செய்ய முடியாதென்று!

ஆனாலும், என் உள்ளத்திலே ஒரு வித ஆர்வத்தைக் கிளப்பிவிட்டிருக்கும் தாங்கள், என்ன சொல்லுகிறீர்களோ அதன்படி நடக்க நான் சித்தமாயிருக்கிறேன். தயவு செய்து அடியாளிடம் கருணை கூர்ந்து பதில் எழுத வேண்டுகிறேன்.

என்றும் உங்கள்,

லீலா.

குறிப்பு:—பதில் எழுதுவதற்கு இத்துடன் வெள்ளைத் தாள் ஒன்றும் இணைத்திருக்கிறேன். பேனா கருப்பையாவிடமிருக்கிறது.

கடிதத்தைப் படித்து முடித்ததும், சுற்று முற்றும் பார்த்தேன்; யாராவது போலீஸ்காரர்கள் பார்க்கிறார்களோ என்ற சந்தேகம் எனக்கு. கருப்பையா என் முகத்தையே உற்று நோக்கிக் கொண்டிருந்தான். பாவம், படிப்பில்லாதவன்! 'என்ன சொல்லப் போகிறேனோ!' என்ற கவலை வேறு அவனுக்கு. மறுமுறையும் அக்கடிதத்தைப் படித்தேன். மடித்துப் பத்திரப் படுத்திக்கொண்டு புன்சிரிப்புடன் கருப்பையாவைப் பார்த்தேன். எனக்குக் கோபமில்லை என்று கண்டு கொண்ட அவன் குதூகலம் அடைந்தான். "லீலா என்ன ஸார், எழுதியிருக்குது?" என்று கேட்டான்.

"உனக்கு லீலாவை நன்றாகத் தெரியுமோ?" என்று நான் அவனைக் கேட்டேன். "அவங்க வீட்டிலேயும் நான் தான் பால் கறக்கிறேன்!" என்றான் அவன். கருப்பையா பல வீடுகளில் பால் கறந்து கொடுத்து மாதச் சம்பளம் வாங்குபவன்.

அவனிடம் லீலா தன் கடிதத்தில் எழுதியிருந்ததைக் கூறினேன். அவன் முகத்தில் ஏமாற்றத்தின் சாயல் தோன்றிற்று. ஒரு வேளை அவன் காதல், கீதல் எதிர்பார்த்தானோ, என்னவோ?

நான் அதைக் கவனிக்காதவன் போல், "பதில் எழுதித் தருகிறேன், கொடுக்கிறாயா?" என்று கேட்டேன்.

"ஓ, அதைவிட வேறு எனக்கு என்ன வேலை? ஜோராக எழுதுங்கள்!" என்று எனக்கு உற்சாகமூட்டி, மடியில் வைத்திருந்த பேனாவையும் கொடுத்தான்.



அன்புள்ள லீலாவுக்கு, கடிதம் கிடைத்தது; மிக்க மகிழ்ச்சி அடைந்தேன். உன்னுடைய தேசபக்தியைக் கண்டு மிகவும் பெருமை அடைகிறேன். என்னுடைய யோசனைப்படி நீ நடப்பதற்கு எவ்வளவோ தைரியம் வேண்டும்; ஆபத்தான காரியம். இன்னும் நன்றாக யோசித்து எழுதவும்.

அன்பன்,

ஐராவதம்.

* * *

மறுநாள் லீலாவிடமிருந்து பதில் வரவில்லை. கருப்பையாவிடம் யோசித்துப் பதில் அனுப்புவதாகச் சொல்லியிருந்தாள். வானத்தில் மேகங்கள் வந்து குவிவதுபோல எண்ணங்களினால் என் மனம் நிரம்பியது.

"தேசபக்தி நிரம்பிய ஒரு இளம்பெண்ணின் வாழ்வே எனக்குக் கடிதம் எழுதியதின் காரணமாக அஸ்தமித்துவிடுமோ?" என்று என் நெஞ்சம் கொதிக்கத் தொடங்கியது. ஆனால், இந்த அடிமை நாட்டின் சுயராஜ்யப் போராட்டத்திற்கு ஒரு போர் வீரராக வரும் லீலாவை விட எனக்கு மனமில்லை. நாம் நல்ல எண்ணத்துடன் காரியம் செய்கிறோம். நீரில் கழுவி எடுத்த அரிசி போன்று நமது இதயம் சுத்தமாக இருக்கிறது. ஆகவே, அவளால் வருகின்ற துன்பத்தை எதிர்த்து நின்று வெற்றி பெறவேண்டியதே நமது கடமை என்று முடிவு கட்டினேன்.

இரவு எட்டு மணி இருக்கும். "நீங்கள் வீட்டிற்குச் செல்லலாம்" என்று கூறி லாக்-அப்பைத் திறந்து விட்டார் சர்க்கிள் இன்ஸ்பெக்டர். நான் ஒரே ஆச்சரியக் கடலில் மூழ்கி விட்டேன். "என்ன வேடிக்கை ஸார், இது!" என்ற வார்த்தைகள் என்னை அறியாமலே வெளியே வந்தன.

"ஒன்றும் வேடிக்கையில்லை: பின்னால் மாஜிஸ்ட்ரேட்டிடமிருந்து சம்மன் வரும்போது வரலாம். தற்சமயம் வீட்டிற்குப் போங்கள்!"

அவ்வளவுதான்; ஒரே ஓட்டமாக வீட்டை நோக்கி ஓடினேன். விடுதலை பெற்றவனின் உணர்ச்சியை விடுதலை பெற்றவன்தானே அனுபவிக்க முடியும்?

* * *

மறு தினம் கருப்பையா என் வீட்டிற்கு வந்தான். லீலாவின் பதில் கடிதம் கொண்டுவந்து கொடுத்தான்.



அதில் எடுத்தவுடன் "அன்பே!" என்று ஆரம்பித்திருந்ததைக் கண்டதும் எனக்கு உண்டான ஆச்சரியத்திற்கு அளவே யில்லை. வியப்புடன் கடிதத்தை மேலே படித்தேன்.

தங்களுடைய அருமைக் கடிதம் கிடைத்தது. தாங்கள் எந்த யோசனை சொன்னாலும் அதனால் எந்த ஆபத்து வந்தாலும் நான் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறேன். எனக்கு மட்டும் தங்கள் இதயத்தில் என்றும் ஓர் இடம் இருக்க வேண்டும். உங்களுடைய பதிலை எதிர்பார்த்து ஏங்கிக் கொண்டிருக்கும்.

லீலா.

மேற்படி கடிதத்தைப் படித்து முடிக்கும் வரையில் எனக்கு ஒரே மயக்கமா யிருந்தது. உள்ளத்தில் ஒரு விதமான குளுகுளுப்பு உண்டாயிற்று. ஏதோ பெரிய சம்பத்துக் கிடைத்து விட்டதுபோல் பெருமிதம் கொண்டேன்.

நாளடைவில் எப்படியோ லீலாவின் அன்பு வலையில் விழுந்து விட்டேன். உலகமே எனக்கு லீலாவின் மயமாகத் தோன்றிற்று. தேசத்தின் மீது அவளுக்கு ஏற்பட்ட காதல் திடீரென்று என்மீது ஏற்பட்டுவிடும் என்று நான் சற்றும் எதிர்பார்க்கவில்லை. ஆனாலும், அந்த எதிர்பாராத காதல் எப்படியோ நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்தது. எல்லாம் கருப்பையாவின் மூலம் அடிக்கடி கைமாறிக்கொண்டிருந்த கடிதங்களின் மூலமாகத்தான்!

ஒரு நாள் பகல் மூன்று மணி இருக்கும். கருப்பையா லீலாவிடமிருந்து ஒரு கடிதம் கொண்டு வந்தான். அதில்,

என் அன்பிற்குரிய செல்வமே,


எனக்கு ஒரு அவசரத் தேவையை முன்னிட்டு ரூ. 250 வேண்டியிருக்கிறது. தங்கள் பொற் கரத்தால் கருப்பையாவிடம் கொடுத்தனுப்பும்படி கேட்டுக் கொள்ளுகிறேன். கருப்பையா ரொம்பவும் நம்பிக்கையானவன்; ஒன்றும் யோசிக்க வேண்டாம்.

தங்கள் அடிமை,

லீலா.

என்று சுருக்கமாக எழுதியிருந்தது. உடனே ரூ. 250 எடுத்து கருப்பையாவிடம் கொடுத்து, "ஓடு, ஓடு! ரொம்ப அவசரம்போலே யிருக்கிறது!" என்று சொல்லி விரட்டி விட்டேன்.

மேற்சொன்ன கடிதம் வந்த ஒரு வாரம் கழித்து, மறுபடியும் அவசரத் தேவையை முன்னிட்டு ரூ. 100 கேட்டு லீலா கடிதம் எழுதியிருந்தாள். எனக்கு யோசனையாகப் போய் விட்டது. "நல்ல பணக்காரக் குடும்பத்தில் பிறந்த பெண்; இவளுக்குப் பணம் தேவையாயிருந்தால் நம்மை ஏன் கேட்க வேண்டும்? அவளிடம் ரூபாய் இல்லாமலிருக்குமா?" என்றெல்லாம் எண்ணி, என்னிடம் தற்சமயம் ரூபாய் ஒன்றும் இல்லையென்றும், அதற்காக வருந்துவதாகவும் எழுதி விட்டேன்.



என்ன ஆச்சரியம்! அடுத்த கணமே அவன் அளவில்லாத கோபத்துடன் எனக்கு ஒரு கடிதம் எழுதி விட்டான்.

அதாவது, நான் அவனை ரொம்பவும் ஏமாற்றி விட்டதாகவும், வஞ்சனை செய்து விட்டதாகவும், அவனுடைய மனதைக் கெடுத்த சண்டாளன் நான் தான் என்றும் அவன் ஏகவசனமாக எழுதியிருந்தான்.

அடடா! அன்பையே பிழிந்து எழுதிய அந்தக் கடிதங்கள் எங்கே, இப்படி வசவுகளைப் பொழிந்திருந்த இந்தக் கடிதமெங்கே?

* * *

சில நாட்களுக்குப் பிறகு என்னுடைய நண்பர் ஒருவர் என்னைக் கூப்பிட்டனுப்பினார்: அவரைப் பார்க்கப் போனேன்.

"இதெல்லாம் தங்கள் கடிதம்தானே?" என்று ஒரு கடிதக் கட்டைத் தூக்கி என் முன்னே போட்டார்.

என் உடம்பெல்லாம் வியர்க்க ஆரம்பித்து விட்டது. கால்கள் தடதடவென்று ஆட ஆரம்பித்து விட்டன.

ஆம்; அதே கடிதங்கள்! அத்தனையும் நான் விலாவிற்கு எழுதிய கடிதங்கள்!

"இதெல்லாம் எப்படி உங்களிடம் வந்தது?" என்று உளறிக் கொண்டே கேட்டேன்.

"கருப்பையா என்னுடைய வீட்டிலும் பால் கறக்கிறான். அவனுடைய பெட்டி, படுக்கை முதலியவை இங்கேதான் இருந்தன. அவனும், என் தம்பியும்—அதோ, அந்த அறையில் உட்கார்ந்து கொண்டு அடிக்கடி ஏதோ எழுதிக் கொண்டிருப்பார்கள். என்னமோ எழுதுகிறார்கள் என்று நான் அவர்களைக் கவனிப்பதில்லை. ஒரு நாள் கருப்பையா நிறையப் பணம் வைத்திருந்ததைப் பார்த்தேன். அப்பொழுதும் 'நமக்கென்ன?' என்று சும்மா இருந்து விட்டேன். மற்றொரு நாள் இந்தக் கடிதக் கட்டு கருப்பையாவின் பெட்டிக்கருகில் கிடந்தது. பிரித்துச் சில கடிதங்களைப் படித்துப் பார்த்ததும், கருப்பையாவைக் கூப்பிட்டு, "இந்தக் கடிதங்களெல்லாம் ஏது?" என்று அதட்டிக் கேட்டேன். அவன் பயந்து போய், இந்தக் கடிதங்களெல்லாம் நீங்கள் தான் எழுதினீர்களென்றும், அவன் தன் தம்பியைக் கொண்டு தங்களுக்குப் பதில் கடிதங்கள் எழுதியதாகவும் சொன்னான். அந்த க்ஷணமே அவனை வீட்டை விட்டுத் துரத்திவிட்டோம்!" என்றார்.

அப்புறம் நான் என்ன ஆனேன் என்பது எனக்கே தெரியாது!

காலக்ஷேபம்

வைத்தியக்காரர்!

முதல் நண்பர் :—என்னங்காணும், சாஸ்திரிகளே! நான் போன மாதம் ஊரிலிருந்து நாலைந்து கடிதம் போட்டதற்குப் பதிலுக்கு ஒரு கார்டுகூடப் போடவில்லையே?

இரண்டாம் நண்பர் :—அட என்னங்காணும், வைத்தியக்காரப் பேர்வழியா யிருக்கிறீரா? கார்டு விலை குறையட்டும்னு இருந்தேன்! அதற்குள் நீரே நேரில் வந்துட்டீர்!

—எஸ். பாண்டியன்.

அந்த இருவர்!

கட்டுரையாளர் :— முன்னேக்கு இப்போது தேவலை? இரண்டு பங்கு பேர் என்னுடைய கட்டுரையைப் படிக்க ஆரம்பித்து விட்டார்கள்......

மற்றவர் :—அடாடா! எனக்குச் சொல்லவே இல்லையே, எப்பொழுது உங்களுக்குக் கலியாணம் ஆயிற்று?

—எம். பி. துரைசாமி.

வேலையோடுதான்!

பழைப்பழ வியாபாரியிடம் ஒரு வழிப்போக்கன் பின்வருமாறு சொன்னான் :

வழிப் போக்கன் :—"ஏனப்பா, ஜன நடமாட்ட மில்லாத இந்த இடத்தில் சும்மா உட்கார்ந்துகொண்டு இருக்கிறாய்? வியாபாரம் ஒன்றும் நடக்கவில்லையே. பழைப் பழங்களின் மேல் ஈக்கள் மொய்த்துக் கொண்டிருக்கிறதே?

வியாபாரி :—சும்மாவா உட்கார்ந்து கொண்டிருக்கிறேன்? ஈ ஓட்டிக் கொண்டு அல்லவா உட்கார்ந்து கொண்டிருக்கிறேன்!

—எம். எஸ். மணி.

அதுவும் கேள்வியா?

ஒரு பிரபலப் பிரசங்கி தன்னுடைய பிரசங்கத்தின் முடிவில் சில சீட்டுக் கேள்விகளுக்குப் பதில் சொல்ல ஆரம்பித்தார்.

நடுவே ஒரு ஆசாமி துண்டுக் கடிதம் ஒன்றைக் கொடுத்துவிட்டு அவர் அருகிலேயே நின்று கொண்டிருந்தான்.

பிரசங்கி அதையும் கேள்விச் சீட்டு என்று நினைத்து உரத்துப் படித்தார்.

"நீங்கள் இன்று அவசரத்தில் போட்டுக் கொண்டு வந்த சட்டை முதுகுப் பக்கம் கிழிந்திருக்கிறது. இதோ இந்த ஆள் மூலம் உங்களுக்கு ஒரு அங்கவஸ்திரத்தை அனுப்பியிருக்கிறேன். போர்த்திக் கொள்ளவும்!"

—பி. ராமமூர்த்தி.

ஆச்சரியமில்லை!

கடைக்காரர் :—நம்மிடம் வாங்கிக்கொண்டு போனீர்களே பனியன், சரியா யிருக்கோ?

வாடிக்கைக்காரர் :—ஆகா! ரொம்ப சரியாய் இருந்தது. நம்ப அஞ்சு பசங்களுக்கும்!

கடைக்காரர் :—ரொம்ப ஆச்சரியமாய் இருக்கே!

வாடிக்கைக்காரர் :—ஆச்சரியம் என்ன! ஒவ்வொரு தடவையும் வெளுத்து வரும்போது அது சுருங்கிக்கொண்டே வந்தது. இப்போது அதை கடைசிப் பயல் போட்டுண்டு இருக்கான்!

—எம். பி. டி.

பயமில்லை!

தோட்டக்காரன் (மரத்தில் இருக்கும் பையனைப் பார்த்து):—அடேய், திருட்டுப் பையா! மரியாதையாய் இறங்கிப் போய் விடுகிறாயா, அல்லது உன் அப்பாவிடம் சொல்லி விடட்டுமா?

பையன் :— எங்க அப்பாவிடம்தானே! இதோ, அவரும் மரத்தின் மேல்தான் இருக்கிறார்!

—எஸ். சொர்ணம்.


★

பிரின்ஸிபால் :—நிச்சயமாய் காலேஜில் இடமில்லை. மாணவிகளில் யாருக்காவது கல்யாணமாகிப் போனால்தான் உங்கள் பையனுக்கு இடம் உண்டு.

தகப்பனார் :—என் பையனுக்கே அவர்களில் ஒருத்தியைக் கல்யாணம் செய்து கொண்டு விடுகிறேன்! — இடத்துக்கு இடமுமாச்சு, கல்யாணத்துக்குக் கல்யாணமு மாச்சு!

★





இந்தியாவின் பலவகைப்பட்ட தொழில்களுக்கு ஏற்ற முறையில் உற்பத்தி செய்யப்பட்ட எங்கள் தயாரிப்புகள் சிலவற்றை மேலே காணலாம்.

JENSON & NICHOLSON

MAKERS OF PAINTS

★ படித்துப் பார்! ★

காந்திய அரசியல்

[ஆசிரியர்: ஸ்ரீமன் நாராயண் அகர்வால்; மொழிபெயர்ப்பு: நாமக்கல் கவிஞர்; பிரசுரம்: தமிழ்ப்பண்ணை, தியாகராய நகர், சென்னை; விலை ரூ. 3.]

'பிரிட்டிஷ்காரரும் வேண்டாம்; காங்கிரஸ்காரரும் வேண்டாம்; நானே இந்திய ராஜ்யத்தை எடுத்துக் கொண்டு நடத்துகிறேன்' என்று கடவுள் சொன்னால், அந்த ராஜ்யம் எப்படியிருக்கும் என்று தெரிந்துகொள்ள நமக்கு ஆவலாக இராதா? அத்தகைய ஆவல் உள்ளவர்கள் இந்தக் 'காந்திய அரசியல்' என்னும் நூலைப் படியுங்கள்!

மகாத்மா காந்தி வெகு நாட்களாக இந்தியாவில் ராமராஜ்யம் ஏற்பட வேண்டும் என்று கனவு கண்டு வருகிறார். ராம ராஜ்யம் என்றால் பூமியில் நடக்கும் கடவுளின் ஆட்சி என்றும் சொல்லி வருகிறார்.

இப்படிப் பல முறை காந்திஜி தமது ராம ராஜ்யத்துக்கு விளக்கம் கொடுத்து வந்த பிரசங்கங்கள் எழுத்துக்கள் எல்லாவற்றையும் வைத்துக்கொண்டு காந்திஜியின் உத்தம சிஷ்யர்களில் ஒருவராகிய ஸ்ரீமன் நாராயண் அகர்வால் ஓர் அரசியல் திட்டத்தை வகுத்திருக்கிறார். அதற்குக் காந்தியடிகளின் ஆசியும் கிடைத்திருக்கிறது. இத்தகைய புஸ்தகத்தை மகாத்மாவின் மற்றொரு உத்தம சிஷ்யராகிய நாமக்கல் கவிஞர் அழகிய நிந் தமிழில் மொழி பெயர்த்திருக்கிறார்.

ஒவ்வொரு வீட்டின் அலமாரியையும் இது வெகு நன்றாக அலங்கரிக்கும் என்று சொல்லும்படி தமிழ்ப்பண்ணையார் வழக்கம்போல் மிகவும் அழகாக இப் புத்தகத்தை வெளியிட்டிருக்கிறார்கள். அட்டையில் விளங்கும் காந்தி மகானின் வர்ணப் படத்துக்காகவே இந்தப் புத்தகத்துக்கு மூன்று ரூபாய் கொடுத்து வாங்கலாம்.

கொனஷ்டையின் கதைகள்
(இரண்டாம் புத்தகம்)

[பிரசுரம்: புத்தக நிலையம், தெப்பக்குளம், திருச்சி; விலை: ரூ. 3—8—0.]

பதின்மூன்று கதைகள் கொண்ட இந்தப் புத்தகம் பதின்மூன்று தடவை அல்ல, எத்தனையோ பதின்மூன்று தடவை நம்மைச் சிரிக்க வைக்கிறது! சாதாரண மனிதரைப் பார்த்துச் சிரிக்க வைக்கிறது! தேவர்களைப் பார்த்துச் சிரிக்க வைக்கிறது. ஊர்வசியைப் பார்த்துச் சிரிக்க வைக்கிறது. நவ நாகரிக நாரீமணிகளைப் பார்த்தும் சிரிக்க வைக்கிறது.

மைசூர்ப் பாகில் மைசூர் இல்லை; நவரை சமுத்திரத்தில் சமுத்திரமில்லை; அந்த மாதிரியே கொனஷ்டையின் கதைகளில் கொனஷ்டைத்தனம் இல்லாமல் போய் விடுமோ என்று பயப்பட வேண்டாம்! வேண்டியமட்டும் கொனஷ்டைத்தன மிருக்கிறது! இதன் காரணமாக மைசூர்ப் பாகில் கூட மைசூர் இருக்குமோ என்ற சந்தேகமும் உண்டாகிறது!

FATAL CART

[ஆசிரியர்: சக்ரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்; மொழிபெயர்ப்பு: டாக்டர் வி. ஆர். ராமஸ்வாமி; பிரசுரம்: ஹிந்துஸ்தான் டைம்ஸ், புது டெல்லி; விலை: ரூ. 2]

1925-ம் வருஷத்திலிருந்து ராஜாஜி அவ்வப்போது தமிழில் பல அரிய கதைகள் எழுதி வந்திருக்கிறார். அவற்றை வி. ஆர். ராமஸ்வாமி ஆங்கிலத்தில் மொழி பெயர்த்திருக்கிறார். அந்தத் தொகுதிதான் இது.

தேசத்துக்கும் சமுதாயத்துக்கும் உண்மைக்கும் ஒப்பற்ற தொண்டு செய்து வரும் ராஜாஜியின் வாழ்க்கை அனுபவத்திலிருந்தும் அன்பு மயமான உள்ளத்திலிருந்தும் வெளியான இந்தக் கதைகளைப் பற்றித் தமிழர்களுக்கு அதிகம் சொல்ல வேண்டியதில்லை.

தமிழ் நாடு தந்த தவப் புதல்வரின் உள்ளத்தை ஓரளவு ஆங்கில உலகம் அறியவும் இந்தப் புஸ்தகத்தினால் சாத்தியமாகும்.

முன் ஜாக்கிரதை!



"என்ன ஐயா, இது, நோட்டீஸ?"

"வேறு ஒன்றும் இல்லை; வீட்டைக் காலி பண்ணச் சொல்லி நோட்டீஸ் கொடுத்திருக்கிறேன். அவ்வளவுதான்!"

"வீட்டைக் காலிபண்ணச் சொல்கிறீர்களா!—நான் இப்பத்தானே ஐயா குடித்தனம் வந்திருக்கிறேன்!"

"ஆமாம்! இப்போதே நோட்டீஸ் கொடுத்தால்தான் இரண்டு வருஷம் கழித்தாவது நீங்கள் காலி பண்ணுவீர்கள்!"



யசோதரா

ஆசிரியர்: விச்வம்பரநாத் கௌசிக்
மொழிபெயர்ப்பு: ரா. வீழிநாதன்

3

இரவு மணி எட்டு அடித்து விட்டது. பிச்சைக்காரனும் அவனுடைய பெண்ணும் ஒரு மரத்தடியிலே உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தனர்.

"என் அப்பா, அந்த ஐயா எவ்வளவு இரக்கமுள்ளவராக இருக்கிறார், பார்த்தாயா?" என்று கேட்டாள் பெண்.

"ரொம்ப இரக்க முள்ளவர்தான், அம்மா!"

"அன்றைக்கு ஒரு துணி கொடுத்தார். இன்றைக்கு இன்னொரு துணி கொடுத்து விட்டார். இது மாதிரி தாராளமாக வேறு யாராவது கொடுப்பார்களா?"

"இப்படி யிருக்கிறவர்கள் ரொம்பக் குறைச்சல்தான்" என்றான் பிச்சைக்காரன்.

சிறிது நேரம் பேசாமலிருந்து விட்டு, அந்தப் பெண், "அப்பா, நாம் இங்கே இருக்கிற வரைக்கும் தினம் ஒரு தடவை யாவது அவர் வீட்டுக்குப் போய் வரு வோமே!" என்றாள்.

"அதெல்லாம் தினம் போகக் கூடாது. போனால் கோபித்துக் கொண்டாலும் கோபித்துக்கொண்டு விடுவார்."

"அதெல்லாம் ஒன்றும் கோபித்துக் கொள்ள மாட்டார், அப்பா!" என்று ரொம்பவும் தெரிந்தவள்போல் கூறினாள் அவள். பிச்சைக்காரன் ஒரு தடவை பெண்ணை முறைத்துப் பார்த்து விட்டு "உனக்கு எப்படித் தெரியும்?" என்று கேட்டான்.

இந்தக் கேள்வியைக் கேட்டதும் பெண் பிரமித்து விட்டாள். இருந்தாலும் சமா ளித்துக் கொண்டு, "இவ்வளவு இரக்க முள்ளவர்களுக்குக் கோபம் வருமா, அப்பா?" என்று பதில் சொன்னாள்.

"சீ, அசடே! தினம் போய் ஒருத் தருக்குத் தொந்தரவு கொடுக்கலாமா?"

"நாம் அவரிடம் ஒன்றும் கேட்கவே வேண்டாம், அப்பா!"

"அப்படியானால், அவர் வீட்டுக்குப் போவானேன்?"

பெண்ணால் இந்தக் கேள்விக்குப் பதில் சொல்ல முடியவில்லை. சிறிது நேரம் யோசனையில் ஆழ்ந்த பின்னர், "நம்மீது இத்தனை இரக்கப்பட்டு உதவி செய்பவர் களைப் பார்த்தால் என்ன?" என்றாள்.

"பயித்தியம் போலப் பேசுகிறாயே! நாம் யார், அவர் யார்? நமக்கும் அவருக்கும் என்ன சம்பந்தம்? நாம் போவதெல்லாம் பிச்சைக்குத் தானே?"

தந்தையின் இந்த வார்த்தைகள் பெண் ணுக்குப் பிடிக்கவில்லை. 'அப்பா தன் காரி யத்தைத்தான் கவனிப்பார். அவருக்குத் தன் காரியமானால் சரி; பிறர் எக்கேடு கெட்டுப் போனால் என்ன என்று நினைப் பார். இந்த விஷயத்தில் அப்பா ரொம்ப மோசம்' என்று தன் மனதிற்குள் எண்ணிக் கொண்டே மௌனமா யிருந்தாள்.

சிறிது நேரம் கழித்து "அப்பா, நீ எங்கே யாவது வேலை செய்யேன். பிச்சை வாங்கு வதைக் காட்டிலும், வேலை பார்க்கிறது எவ்வளவோ நல்ல தில்லையா?" என்றாள்.

"வேலை பார்க்கிறதிலே எவ்வளவோ தொந்தரவு இருக்கிறது, அம்மா! எப் பொழுது பார்த்தாலும் வேலை செய்து கொண்டே இருக்கவேண்டும். எசமான் சொல்வதைத் தட்டாமல் கேட்டுக் கொண் டிருக்க வேண்டும். அப்படிக் கஷ்டப்படு வதைக் காட்டிலும், இந்தப் பிச்சைப் பிழைப்பு எவ்வளவோ நல்லதல்லவா!"

"இந்தப் பிச்சை வாங்குவதாலே என்ன என்னவெல்லாம் பேச்சுக் கேட்க வேண்டியிருக்கிறது தெரியுமா? எனக்கு அந்த ஐயா முன்னால் போய் நிற்கிற பொழுது வெட்கம் பிடுங்கித் தின்கிறது!"

"நம் தொழிலே இதுதானே! வெட்கப் பட்டால் முடியுமா அம்மா?"

"அப்பா, இந்தத் தொழில் எனக்குக் கொஞ்சம் கூடப் பிடிக்கவில்லை. இதை விட்டு விட்டு எங்கேயாவது வேலை பார், அப்பா! அந்த ஐயா கிட்டச் சொன்னால் ஏதாவது வேலை பார்த்துக் கொடுப்பார்!" என்று சொன்னாள்.

"சரி, இந்தத் தடவை போனால் கேட்டுப் பார்ப்போம். எனக்குத் தூக்கம் வருகிறது" என்று கூறிப் பிச்சைக்காரன் படுத்து விட்டான்.

அந்தப்பெண்ணோ, உட்கார்ந்தவண்ணம் ராமநாதபாபுவைப் பற்றிச் சிந்திக்கலானாள். 'அந்த ஐயா ரொம்பவும் இரக்க முள்ளவர். தங்கமான குணம். பார்ப்பதற்கு அழகாகவும் இருக்கிறார். என்னிடம் அவருக்குப் பிரியம் இருக்கிறது என்பதை அவரது கண்களே சொல்லுகின்றன. அப்பா அவர் வீட்டிலே வேலை பார்த்தால், நான் இராப் பகல் அவருடைய வீட்டிலேயே இருப்பேன். அவரைப் பார்க்கிறதற்கு என் மனசு என்ன துடியாய்த் துடிக்கிறது! தினம் ஒரு தடவையாவது அவரைப் பார்க்கவேண்டும் என்று தோன்றுகிறது!'

இப்படி யோசித்துக் கொண்டிருக்கும் பொழுது, அவளது சிந்தனை புரண்டு கொடுக்கும். 'எனக்கும் அவருக்கும் என்ன சம்பந்தம்! அவரோ, பணக்காரர்; நானோ பிச்சைக்காரி, என்னிடம் அவருக்கு அன்பு ஏற்படவாவது?'

இந்த எண்ணம் அவளுக்கு வருத்தத்தை அளித்தது. கண்கள் கண்ணீரைச் சொரிந்தன. ஆனால், அவள் மறுபடியும் 'என்னிடம் அவருக்கு அன்பு இல்லை என்றால் அப்படி ஏன் பார்க்கிறார்? அவர் பார்ப்பது போல வேறு யாராவது பார்க்கிறதுதானே! இவர் விஷயத்தில் ஏதோ விசேஷம் இருக்கிறது என்று எண்ணத்தானே வேண்டியிருக்கிறது! மேலும் அவர் கண்களும் என் கண்களும் சந்திக்கும் பொழுது என் மனதை என்னவோ செய்கிறதே! பிறர் பார்க்கும் பொழுது மட்டும் ஏன் அப்படி ஆவதில்லை? அவரைத் தலைதூக்கிப் பார்க்க எனக்கு ஏன் வெட்கமாயிருக்கிறது? பிறரைப் பார்க்கும் பொழுது அந்த வெட்கம் எங்கு ஓடி மறைந்து விடுகிறது?

அப்பா அங்கே போனதும் சோறு தான் கேட்கிறார். அப்பாவிடம் இது ரொம்பக் கெட்ட வழக்கம். அவர்தான் கேட்காமலே கொடுத்து விடுகிறாரே! கொடுக்கவில்லை என்றால்தான் என்ன குடி முழுகிப் போய்விடும்? வாங்கிச் சாப்பிடுவதற்குத்தான் இந்த உலகம் பூராவும் இருக்கிறதே! அப்பா இப்பொழுது வேலை செய்யச் சம்மதித்து விட்டால் நல்லது. இனிமேல் அவரைப் பிச்சை வாங்க விடக் கூடாது. அந்த ஐயா என்னைப் பிச்சைக்காரி என்றுதான் நினைத்துக் கொண்டிருப்பார். சிவசிவா! இந்த அவமானம் என்னால் தாங்க முடிய வில்லையே! ஒருவேளை அப்பா அவரிடம் வேலை கேட்காவிட்டாலும் நான் அவரையும் கேட்டு விடுகிறேன். நான் சொன்னால் அவர் தட்டமாட்டார். அப்படி 'மாட்டேன்' என்று சொல்லிவிட்டால், அப்புறம் அவர் வீட்டு வாசற்படியில் காலடி எடுத்து



வைக்க மாட்டேன் என்றெல்லாம் யோசித்துக் கொண்டே தனது தந்தைக்குப் பக்கத்தில் படுத்துச் சிறிது நேரத்திற்கெல்லாம் தூங்கி விட்டாள்.

4

காலையில் கண் விழித்த பெண், தன் தந்தை வழக்கத்துக்கு மாறாகத் தூங்கிக் கொண்டிருப்பதைக் கண்டு வியப்புற்றாள். அவனை எழுப்புவதற்காக அவனது தோள் பட்டையைப் பிடித்து ஒரு உலுக்கு உலுக்கினாள். அவனுடைய உடல் எப்பொழுதும் போலல்லாமல் சற்று அதிகமாகவே சுடுவதை உணர்ந்தாள். பிச்சைக்காரனும் விழித்துக் கொண்டு, "அம்மா, எனக்கு உடம்பு சரியாயில்லை. அதனால்தான் படுத்துக் கிடக்கிறேன்" என்றான்.



"உனக்கு உடம்புக்கு என்ன அப்பா?"

"நேற்று ராத்திரியிலிருந்து ஜுரமாயிருக்கிறது, அம்மா!"

"அப்படியானால் இங்கே எப்படிப் படுத்துக் கிடக்கிறது?"

"வேறென்ன செய்வது, அம்மா?"

"எங்காவது ஒரு சத்திரத்துக்குப் போகலாமே!"

"உடம்பு குணமில்லாதவனைச் சத்திரத்திற்குள் நுழைய விடமாட்டார்களே!"

இதைக் கேட்டவுடன் அவள் மிகவும் கவலைப்பட்டாள். இப்படித் திறந்த வெளியில் படுத்துக் கிடந்தால் அப்பாவின் உடம்பு எப்படி குணமாகும்? இன்னும் அதிகமாக அல்லவா ஆகிவிடும்; மருந்துக்கு எங்கே போவது? அப்புறம் சோற்றுக்கு வழி?- இம்மாதிரியான பிரச்னைகள் அந்தப் பெண்ணின் மூளையைக் கலக்கின.

அவள் கவலைப்படுவதைக் கண்ட பிச்சைக்காரன், "நான் இங்கேயே படுத்துக் கிடக்கிறேன். நீ போய் அந்த ஐயாவிடம் நான் உடம்பு சரியில்லாமல் கிடக்கிறேன் என்று சொல்லு. அவர் சோற்றுக்கு வழி செய்து விடுவார். இன்று நான் ஒன்றும் சாப்பிடப் போவதில்லை. நீ சாப்பிட்டு விட்டு இங்கே வந்து விடு. இந்தக் குவளையிலே தண்ணீர் கொண்டு வந்து வைத்து விட்டுப் போ" என்றான்.

"அப்பா, உன்னைத் தனியாக விட்டு விட்டு நான் போகவே மாட்டேன்" என்றாள் அவள்.

"பயப்படாதே அம்மா, பகல் நேரந்தானே! சாப்பிட்டு விட்டுச் சீக்கிரம் வந்து விடு."

"நானும் இன்றைக்குச் சாப்பிட வில்லை அப்பா!"

"அப்படிச் சொல்லாதே அம்மா! சாப்பிடாமல் இருக்க முடியாது. போய்ச் சாப்பிட்டு விட்டு வந்து விடு."

"ஒரு நாள் சாப்பிடா விட்டால் என்ன அப்பா!"

"என் உடம்பு, என்றைக்குக் குணமாகிறதோ யார் கண்டது? சாப்பிடாவிட்டால் பலவீனமாகப் போய் விடுவாய். அப்புறம் என்னை யார் கவனித்துக் கொள்வது?" என்றான் கிழவன்.

"காலைக்குச் சாப்பிட்டுக் கொள்கிறேன். ஒரு நாள் சாப்பிடாவிட்டால் ஒன்றும் பலஹீனமாகப் போய்விட மாட்டேன்."

"இன்னுமொன்று: நீ அந்த ஐயா வீட்டுக்குப் போய் என் நிலைமையைச் சொன்னால், ஒரு வேளை மருந்துக்கு ஏற்பாடு செய்தாலும் செய்வார். தங்குவதற்கு இடம் கொடுத்தாலும் கொடுப்பார். அதனாலே ..."

பெண்ணுக்கு விஷயம் விளங்கிவிட்டது. "உண்மைதானே! நான் சொன்னால் ஏதாவது ஏற்பாடு செய்யாமல் இருக்க மாட்டார்!" என்று எண்ணினாள். 'அந்த ஐயாவோடு பயப்படாமல் பேசவும் பேசலாம்' என்ற எண்ணம் உதித்ததும் அவளது உள்ளத்தில் மகிழ்ச்சி ஏற்பட்டது.

தன்னுடைய மகள் பேசாமல் இருப்பதைக் கண்ட பிச்சைக்காரன் "என்ன, நான் சொல்வது புரிந்ததா? நீ போய் விட்டு வா!" என்றான்.

"இன்னும் கொஞ்ச நேரம் கழித்துப் போகிறேன் அப்பா. இப்பொழுதே போனால் நன்றாயிராது" என்றாள்

"சரி, இன்னும் கொஞ்ச நேரம் கழித்துப் போ!" என்றான் பிச்சைக்காரன்.

பெண் தகப்பனுக்குக் குவளையில் தண்ணீர் கொண்டு வந்து வைத்துவிட்டு உட்கார்ந்திருந்தாள். சற்று நேரம் ஆனதும் "போய்விட்டு வா!" என்று மறுபடியும் பிச்சைக்காரன் சொன்னான்.

அந்தப் பெண் புறப்பட்டாள். அவளுடைய உள்ளத்தில் அநேகவித எண்ணங்கள் போராடிக் கொண்டிருந்தன. ராமநாத பாபுவுடன் பேச வேண்டுமென்ற ஆவலும், அதற்கு மாறான நாணமும் வெட்கமும் அவளது உள்ளத்தில் ஒருவித விசித்திர உணர்ச்சியை உண்டுபண்ணியிருந்தன. "நான் அவரிடம் என்ன சொல்வது? அவர் முன்பு வாய் திறக்கவே கூச்சமாயிருக்குமே! நான் தனியாக வந்திருப்பதைப் பார்த்தால் அவர் என்ன சொல்லுவார்?" என்று யோசித்தவாறே அவள் ராமநாத பாபுவின் வீட்டை நோக்கித் தன்னை மறந்து நடந்து கொண்டிருந்தாள்.

அவள் ராமநாதபாபுவின் வீட்டிற்கருகில் வந்து விட்டாள். வீடு நெருங்க நெருங்க, அவளது இதயத் துடிப்பு அதிகமாயிற்று. நடை வேகமும் குறைந்துவிட்டது. "அவர் வீட்டுக்குப் போவதா, வேண்டாமா?" என்று ஒரு வீட்டு வாசலில் நின்றுகொண்டு யோசிக்கத் தொடங்கினாள். கடைசியில் மனதைத் திடப்படுத்திக்கொண்டு அவரது வீட்டை நோக்கி நடந்தாள். வாசலில் நின்றுகொண்டிருந்த ஆளிடம், "ஐயா இருக்கிறாரா?" என்று தைரியத்தை வரவழைத்துக்கொண்டு கேட்டாள்.

"எந்த ஐயா?" என்று கேட்டான் அவன்.

அவள் தயக்கத்துடன், "சின்ன ஐயாவைத்தான் கேட்கிறேன்!" என்றாள்.

"இருக்கிறார்!" என்றான் வேலைக்காரன்

இந்தச் சம்பாஷணை நடந்து கொண்டிருக்கும் பொழுதே வேலைக்காரன் ஹரித்வாரி அங்கு வந்து சேர்ந்தான். பெண்ணைப் பார்த்ததும், "இரு, ஐயாவைக் கூப்பிட்டு வருகிறேன்" என்று சொல்லி விட்டுச் சென்றான்.

ராமநாதபாபுவிடம், "எசமான், அந்தப் பெண் வந்திருக்குங்க" என்றான்.

ராமநாதபாபு திடுக்கிட்டு, "எந்தப் பெண் அப்பா?" என்றார்.

ஹரித்வாரி சற்றுப் புன்முறுவலுடன் "அந்தப் பிச்சைக்காரப் பெண்தானுங்க' என்று பதில் அளித்தான்.

ராமநாதபாபுவுக்கு ஹரித்வாரி சிரித்தது பிடிக்கவில்லை. சற்றுக் கடுமையான குரலில் "இதற்காக என்னடா சிரிப்பு?" என்றார்.

ஹரித்வாரி வாய் திறவாமல் ஒதுங்கி நகர்ந்து விட்டான். ராமநாதபாபுவும் சீக்கிரமாகவே வெளியில் வந்தார். பிச்சைக்காரப் பெண், சற்று வருத்தத்துடன், மேடையின் மீது கையை ஊன்றிய வண்ணம் நின்று கொண்டிருப்பதைக் கண்டு, சுற்று முற்றும் ஒரு தடவை பார்த்தார். பிச்சைக்காரனைக் காணவில்லை. "என் அம்மா, உன் அப்பன் எங்கே?" என்று அவளைப் பார்த்துக் கேட்டார்.

பெண் தலை குனிந்தவாறு "அவருக்கு உடம்பு சரியாயில்லை" என்றாள்.

"என்ன! உடம்பு சரியாயில்லையா?" என்று சற்றுப் பதற்றத்துடன் கேட்டார்.

"ஆமாம். நேற்றிரவு முதல்."

"இப்பொழுது அவன் எங்கே இருக்கிறான்?"

"சாலையோரத்திலே ஒரு மரத்தடியில்.'

"சாலையோரத்திலா?" என்று கேட்டுவிட்டுச் சிறிது நேரம் கழித்து, "மரத்தடியில் படுத்துக்கிடப்பது நல்லதல்ல" என்றார்.

"அப்படியானால் வேறென்ன செய்வது?"

"சற்று இரு. நான் ஏதாவது ஏற்பாடு செய்கிறேன்" என்று கூறினார் ராமநாதபாபு.

அன்பும் கனிவும் நிறைந்த அவரது சொற்களைக் கேட்ட அந்தப் பெண், தலை நிமிர்ந்து அவரை ஒரு தடவை பார்த்தாள். அவளது பார்வை அவர் உள்ளத்தில் மட்டற்ற மகிழ்ச்சியை உண்டு பண்ணியது. அந்தப் பெண்ணின் தகப்பனுக்கு ஏதாவது சௌகரியம் செய்ய வேண்டும் என்ற நிர்மானத்துடன் தன் அறைக்குச் சென்றார்.

சிறிது நேரத்திற் கெல்லாம் ஹரத்வாரியைக் கூப்பிட்டு "ஏன் ஹரத்வாரி! நீ இருக்கும் அறைக்குப் பக்கத்தில் உள்ள அறை காலியாகத்தானே இருக்கிறது?" என்று கேட்டார்.

"காலியாகத்தா னிருக்கிறது. ஆனால் ஒரே குப்பையும் கூளமுமாகக் கிடக்கிறது."

"யாராவது ஒரு ஆளை விட்டுச் சீக்கிரமாக அதைச் சுத்தம் செய்யச் சொல்லு!"

"சரி, எசமான்."

"போய் சீக்கிரம் அதற்கு ஆளை அனுப்பி விட்டு என்னிடம் திரும்பி வா."

'சரி' என்று கூறிவிட்டு ஹரத்வாரி நகர்ந்தான். ராமநாதபாபுவும் சிறிது நேரத்துக் கெல்லாம் வெளியில் வந்து, "இன்னும் கொஞ்ச நேரம் இங்கே உட்கார்ந்திரு. உன்னுடன் ஒரு ஆளை அனுப்பி வைக்கிறேன். அவனுடன் போய் உன் தகப்பனை இங்கே அழைத்து வந்துவிடு" என்று அந்தப் பெண்ணிடம் சொன்னார்.

பெண், அதற்கொன்றும் பதில் சொல்லாமல், தனது நன்றி ததும்பும் கண்களால் ராமநாதபாபுவைப் பார்த்தாள்!

ராமநாதபாபு உள்ளே சென்று விட்டார். பெண் இன்னும் கொஞ்ச நாட்கள் தம்முடைய வீட்டில் தங்குவாள் என்ற எண்ணம் அவரது உள்ளத்தில் ஒருவிதப் புல்லரிப்பையும் ஆனந்தத்தையும் உண்டாக்கிற்று.

சிறிது நேரத்திற்கெல்லாம் ஹரத்வாரி உள்ளே வந்து, "எசமான், அறையைச் சுத்தஞ் செய்ய ஒரு ஆள் விட்டிருக்கேனுங்க. இன்னும் அரை மணி நேரத்துக்குள்ளே அறை சுத்தமாய் விடும்" என்று கூறினான்.

"ரொம்ப சரி. இன்னுமொரு வேலை நீ செய்தாக வேண்டுமே!"

"என்னுங்க, எசமான்?"

"அந்தப் பெண் வந்திருக்கிறாள் பாரு, அவளுடைய அப்பன் உடம்பு சரியில்லாமல் ஒரு மரத்தடியில் படுத்துக்கிடக்கிறானாம். போய் ஒரு வண்டி வைத்து இங்கே அழைத்து வந்து அந்த அறையிலே அவன் தங்க ஏற்பாடு செய்துவிட வேண்டும்- தெரிகிறதா?"

"ஆகட்டும்" என்று தலையசைத்துக் கொண்டே ஹரத்வாரி அந்தப் பெண்ணையும் அழைத்துக் கொண்டு வெளியே சென்றான்.

ராமநாத பாபுவும் தம்முடைய அறைக்குச் சென்றார்.

* * *

கொஞ்ச நேரம் கழித்து வாசலில் ஒரு வண்டி வந்து நின்றது. அதிலிருந்து ஹரத்வாரியும் அந்தப் பெண்ணும் அவளுடைய தகப்பனும் இறங்கினார்கள்.

(தொடரும்)

வைஸ்ராயின் புத்திமதி

லார்ட் வில்லியம் பெண்டிக் இந்திய வைஸ்ராயாக இருந்த போது, மேஜர் சண்டர்லண்ட் என்பவர் குவாலியர் சமஸ்தானத்துக்கு ரெஸிடெண்டாக வந்தார். அவர் இந்தியாவுக்கு முற்றிலும் புதியவர். சமஸ்தான விஷயங்களில் தலையிடுவதா, தலையிடாம லிருப்பதா என்பதைப் பற்றி அவருக்கு ஒன்றும் விளங்கவில்லை. ஆகையால், அவர் நேராக வில்லியம் பெண்டிக்கிடம் போய், "நான் என்ன மாதிரியான கொள்கையை அனுஷ்டிக்க வேண்டும்?" என்று கேட்டார்.

லார்ட் வில்லியம் பெண்டிக் கொஞ்ச நேரம் யோசனையில் ஆழ்ந்திருந்தார். பின்பு மேஜை மேலே யிருந்த ஒரு வாழைப் பழத்தை உரித்துக் கையில் பிடித்துக் கொண்டு "இதோ பாரும், மேஜர்! குவாலியர் சமஸ்தானம் நழுவி உம்முடைய வாயில் விழுமானால், முன்பு இருந்த ரெஸிடெண்டைப் போல நீர் வெறுமே பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது—பின் என்ன செய்ய வேண்டும், தெரியுமா?' என்று சொல்லிக்கொண்டே அந்த வாழைப் பழத்தை வாயில் போட்டு ஒரே விழுங்காக விழுங்கினார். பின்பு மேஜர் சண்டாலண்டைப் பார்த்து "நான் செய்ததைப் பார்த்தீரல்லவா? இதைப் போல விழுங்கிவிட வேண்டும். இதுதான் நான் அனுஷ்டிக்கும் கொள்கை!" என்றார்.



ஒரே ஒரு ஊரில் அண்ணன் தம்பி இரண்டு பேர் இருந்தார்கள். அண்ணன் பெயர் காளிதாஸ். தம்பி பெயர் ராமதாஸ். காளிதாஸுக்குக் கல்யாணம் ஆகிவிட்டது. ராமதாஸுக்குக் கல்யாணம் ஆகவில்லை. அவன் பெரிய சோம்பேறி. எப்பொழுதும் தூங்கிக் கொண்டும் சாப்பிட்டுக் கொண்டும் இருப்பான். ஆகையால் அவனை எல்லோரும் 'சோம்பேறி ராமு' 'சாப்பாட்டு ராமு' என்று பரிகாசம் செய்து கொண்டே இருப்பார்கள்.

ராமதாஸ் இப்படி இருந்தது, அவனுடைய மன்னிக்குப் பிடிக்கவில்லை. ஒரு நாள் அவன் தூங்கிக் கொண்டிருந்த போது அவனுடைய மன்னி அவனைத் தட்டி எழுப்பி, "ராமு, நீ இப்படி சோம்பேறித்தனமாக இருந்தால் இந்த வீட்டில் இருக்கக் கூடாது. உனக்குச் சாப்பாடும் போட மாட்டேன். நான் உனக்கு ஒரு வேலை தருகிறேன். அதைச் செய்தால்தான் உனக்குச் சாப்பாடு போடுவேன்" என்று சொல்லி விட்டு அவனுடைய கன்னத்தில் ஓர் அறை அறைந்தான். வாசலில் நின்ற பையன்கள் எல்லோரும் கைகொட்டிச் சிரித்தார்கள்.

ராமுவுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. அவன் மன்னியிடம் கோபமாக "என்ன வேலை செய்யவேண்டும்?" என்று கேட்டான். "குளத்திற்குப் போய் ஒரு அண்டா ஜலம் கொண்டு வா!" என்றாள். ராமு ஜலம் கொண்டு வரப் போனான். குளக்கரையில் கிடந்த ஒரு மீன் அவனைப் பார்த்து, "ஏ சோம்பேறி ராமு!" என்று கூப்பிட்டது. ராமுவுக்கு ரொம்பக் கோபம் வந்து விட்டது. அவன் கோபத்தை அடக்கிக் கொண்டு "ஏன் என்னைக் கூப்பிட்டாய்?" என்று கேட்டான்.

"நான் வெய்யிலில் கிடந்து வாடுகிறேன். என்னைத் தூக்கித் தண்ணீரில் போட்டுவிடு. நான்தான் இந்தக் குளத்தில் வசிக்கும் மீன்களுக்கு அரசன். நீ எனக்கு இந்த உதவி செய்தால் நான் உனக்குப் பல உதவிகள் செய்வேன்" என்றது மீன். "சரி" என்று சொல்லி ராமதாஸ் அதை எடுத்துத் தண்ணீரில் போட்டான். அப்போது அங்கே குளு குளு வென்று காற்று அடித்துக் கொண்டிருந்தது. ராமன் தன் மேல் வேஷ்டியைப் பக்கத்தில் இருந்த மரத்தடியில் விரித்துப் படுத்துத் தூங்க ஆரம்பித்தான்.

தூங்கி எழுந்தபோது மணி நான்கு இருக்கும். அவனுக்குத் தன் மன்னி சொன்ன வேலை ஞாபகம் வந்தது. உடனே அவன் மீனை நினைத்துக் கொண்டு, "இந்த அண்டாவில் ஜலம் தானாக நிரம்ப வேண்டும்!" என்று சொன்னான். அண்டா நிறைய ஜலம் பெருகி நின்றது. அவனுக்கு ஆச்சரியம் உண்டாயிற்று. அவன் அண்டாவைப் பார்த்து "என் பின்னாலே வா!"

என்றான். அண்டாவும் தானாகவே நகர்ந்து அவன் பின் சென்றது.

ராமுவுக்கு ரொம்பப் பசி உண்டாயிற்று. அவன் மன்னியைப் பார்த்து, "சாதம் போடு!" என்றான். "நீ காட்டுக்குப் போய் விறகு வெட்டிக் கொண்டுவா, அப்புறம் சாதம் போடு கிறேன்" என்றாள் மன்னி. உடனே ராமு கோடரியை எடுத்துக் கொண்டு காட்டிற்குப் போனான்.


பல மரங்களை வெட்டி விறகு சேர்த்தான். பக்கத்துச் சாலையில் ஒரு வண்டி இருந்தது. ராமன் அதில் விறகை ஏற்றினான்; தானும் ஏறிக் கொண்டான். ஏறினதும், "ஏ வண்டியே, என் வீட்டிற்குப் போ!" என்றான். வண்டி தானாகவே எதிலும் மோதிக் கொள்ளாமல் ஐம்பது மைல் வேகத்தில் போயிற்று. அப்போது அந்த ஊர் அரசனும் அவனுடைய மகளும் பல்லக்கில் பவனி வந்து கொண்டிருந்தார்கள்.

ராமதாஸின் வண்டி அவர்களுக்கு எதிரில் சென்றபோது அவன் அந்தப் பெண்ணைப் பார்த்து, "ஏ பெண்ணே, என்னைக் கல்யாணம் செய்து கொள் கிறாயா?" என்று சிரித்துக் கொண்டே கேட்டான். ராஜாவுக்கு ரொம்பக் கோபம் வந்து விட்டது. அவன் ஒரு சேவகனை அனுப்பி, "சேவகா, அந்த போக்கிரிப் பயலை இங்கே அழைத்துக் கொண்டு வா!" என்றான். சேவகன் இதை ராமுவிடம் சொன்னான். ராமு ராஜாவிடம் சென்று, "என்னை எதற்காக அழைத்தீர்கள்?" என்று கேட்டான். ராஜா அவனைப் பார்த்துக்



கோபமாக, "உனக்கு எவ்வளவு திமிர்? என் பெண்ணைக் 'கல்யாணம் செய்து கொள்கிறாயா?' என்று நீ கேட்பதா?" என்றான்.

ராமதாஸ் பயப்படவில்லை. "உங்களுடைய பெண் சம்மதித்தால் உங்களுக்கும் சம்மதம்தானே?" என்று மிடுக்காகக் கேட்டான். ராஜா "சரி" என்றான். ராஜகுமாரியை அழைத்துக் கேட்டபோது, அவள் "சம்மதம்" என்று சொன்னாள். அரசனுக்குக் கோபம் வந்துவிட்டது. இருவரையும் ஒரு படகில் வைத்து ஆற்றில் விட்டு விடும்படி உத்திரவிட்டான். இருவரும் ஒருவிதமான கவலையும் இல்லாமல் ராஜாவைப் பார்த்துச் சிரித்துக் கொண்டே போனார்கள். மாயமீனின் உதவியினால் ராமதாஸ் சமுத்திரத்தின் மத்தியில் அழகான அரண்மனை கட்டிக் கொண்டு ராஜகுமாரியுடன் சுகமாக வாழ்ந்து வந்தான்.



சமர்த்து!

"என்டா ராமு! வெய்யில் இப்படிக் கொளுத்துகிறது.— இந்தத் தடியான கம்பளிச் சட்டை போட்டுக் கொண்டு பள்ளிக்கூடம் போகிறாயே!"

"ஆமாண்டா! எனக்கும் கஷ்டமாகவே இருக்கிறது. ஆனால், என்ன பண்ணுவது? வீட்டுக் கணக்குப் போடாததற்காக வாத்தியார் அடிப்பார். அடி உறைக்காமலிருக்க வேண்டும் என்பதற்காகவே இதைப் போட்டுக்கொண்டு போகிறேன்!"

★ வட்ட மேஜை ★

விருதுநகர்
4—7—46

ஆசிரியர் அவர்களுக்கு,

விற்பனை வரியானது ஆரம்பத்தில் ராஜாஜியால் போடப்படும் பொழுது 100க்கு 0—8—0 விதம் வருடத்திற்கு ரூ. 20,000 க்கு மேல் வியாபாரம் செய்பவர்களுக்கு மட்டும்தான் போடப்பட்டது. துரதிர்ஷ்டவசமாக அவருடைய மந்திரி சபை நீடித்து நாள் இருக்கவும் இல்லை, தற்சமயம் திரும்பி வரவுமில்லை.

பின்னால் வந்த ஆட்வைஸரி கவர்ன்மெண்ட் 100 க்கு ரூ. 1 விதம் வரியைக் கூட்டியதுடன் வருடத்திற்கு ரூ. 10,000க்கு மேல் வியாபாரம் செய்பவர்களும் விற்பனை வரி செலுத்த வேண்டும் என்று உத்தரவு பிறப்பித்தது.

அந்த உத்திரவின் பலனாக நாட்டில் தற்சமயம் நடப்பது என்ன?


சில்லறையாக வியாபாரம் செய்யும் வெற்றிலைப் பாக்குக் கடைக்காரர்கள், கடலை பொரித்து விற்பவர்கள், தகரத்தால் போகணி செய்து விற்பவர்கள், பூக்கடைக்காரர்கள், செக்கில் எண்ணெய் ஆட்டி எண்ணெய் விற்பவர்கள், காய்கறி கடைக்காரர்கள், மாம்பழம் வாழைப்பழம் விலைக்குமாற்றுக் கடைக்காரர்கள்,—ஆகிய இவர்கள் எல்லாரிடமும் A.C.T.O.க்கள் படையெடுத்துச் செல்லுகிறார்கள். "உங்களிடம் விற்று முதல் கணக்கு இருக்கின்றதா?" என்று கேட்கிறார்கள். பாவம்! அவர்களுக்கு வருடம் 1 க்கு ரூபாய் 5,000 மொத்தம் விற்று முதலாவது கூடக் கஷ்டமான விஷயம். இத்தகைய சில்லறை வியாபாரிகள், A.C.T.O.க்கள் கேட்கும் கச்சா, குறிப்பு, பேரேடு, பில் புஸ்தகம் (டூப்ளிகேட்டுடன்), கொள்முதல் சிட்டைகள், இருப்புச் சரக்குச் சிட்டைகள்,— இவ்வளவும் எங்கே வைத்திருக்கப் போகிறார்கள்? வெறும் கச்சா புஸ்தகம்தான் வைத்திருப்பார்கள். மேற்கண்ட புஸ்தகங்களெல்லாம் இல்லை என்று சொன்னவுடனே 24 மணி நேரத்தில் சென்ற வருட விற்று முதலை எழுதிக் கொடுக்கவேண்டும் என்று A.C.T.O. உத்திரவு போட்டுவிடுகிறார். அப்பாவியான வியாபாரிகள் தங்களிடமிருக்கும் புத்தகங்களை கொண்டு சென்ற வருட விற்று முதல் ரூ. 4000 அல்லது 5,000 அல்லது 6,000 என்று எழுதிக் கொடுக்கிறார்கள். ஆனால் இவைகளை எல்லாம் A.C.T.O. ஒப்புக் கொள்வாரா? ஜனாப் ஜின்னா தேசிய முஸ்லிம் கட்சிகளை ஒப்புக் கொண்டாலும் ஒப்புக் கொள்வார். ஆனால் A.C.T.O-க்கள் மட்டும் ஒரு வியாபாரி அதிலும் சில்லறை வியாபாரியின் ஸ்டேட்மெண்டை ஒப்புக் கொள்ள மாட்டார்கள்!

அந்தக் கணக்கு வைக்க வில்லை, இந்தக் கணக்கு சரியாயில்லை, கார்பன் பேப்பர் சரியாக வைத்து எழுதவில்லை என்று என்னத்தையாவது ஆட்டுக்குட்டியின் மேல் ஓநாய் குற்றம் சொன்னதுபோல் சொல்லி, தங்களுக்கு சர்க்கார் கொடுத்திருக்கும் ஆயுதமாகிய 'எஸ்டிமேட்' என்ற அணுகுண்டைப் போட்டு சில்லறை வியாபாரிகளின் மனதை நொறுக்கி விடுகிறார்கள். எஸ்டிமேட் என்ற வார்த்தையை உபயோகித்து உங்களுக்கு தினசரி விற்பனை ரூ. 30 விதம் வருட விற்பனை ரூ. 10,800 க்கு வரி ரூ. 108-ஐ இப்பொழுது கட்டிவிட்டு, இனி நடந்து கொண்டிருக்கும் நடப்பு வருஷ வியாபாரத்திற்கு மாதம் 1 க்கு ரூ. 8 அல்லது 10 வரியாகக் கட்டவேண்டும் என்று A.C.T.O. சொன்னவுடன் சில்லறை வியாபாரியின் தலை சுழல்கின்றது.

மேற்படியார்களின் முதலீடு ரூ. 500 க்குக் கீழ்தான் இருக்கும். அதில் உடனே 108-ரூபாய் எடுக்க முடியுமா? முடியாது. ஆகையால் மனைவி மக்களின் நகைகளை விற்றுக் கட்டவேண்டும்; அல்லது ரூபாய் 100 க்கு 1—0—0 அல்லது 1—8—0 வட்டியானாலும் பரவாயில்லை என்று பிராமிசரி நோட்டு எழுதிக் கொடுத்து வாங்கிக் கட்டவேண்டும்.

மேற்படி வியாபாரங்களில் ரூபாய் 1 க்கு 0—2—0 விதம் லாபம் கிடைப்பது வெகு பிரயாசை. ஒரு வியாபாரிக்கு ஒரு வருடத்தில் மேற்படி வியாபாரங்களில சுமார் ரூ 5,000 வரையில் விற்பனையாகும். அப்படியானால் அவனுக்கு மொத்தம் கிடைக்கும் வருமானம் ரூபாய்க்கு 0—2—0 விதம் ரூ. 625—0—0.

காரணம் என்ன?



டாக்டர்:—இந்த மருந்தை, காலையும் மாலையும் சாப்பாட்டுக்குப் பிறகு இரண்டு வேளை சாப்பிடச் சொன்னேனே, அப்படித்தானே சாப்பிட்டு வருகிறீர்?

நோயாளி:—இல்லை, டாக்டர்! எனக்குக் கிடைக்கும் ரேஷன் அரிசி ஒரு வேளைக்குத்தான் வருகிறது. ஆகையால் மருந்தையும் ஒரு வேளை தான் சாப்பிடுகிறேன்.

இதில் ஏற்படக்கூடிய செலவுகள்: ஒரு சிப்பந்திக்கு சம்பளம் மாதம் 1-க்கு ரூபாய் 12 வீதம் வருடத்திற்கு ரூபாய் 144—0—0; கடை வாடகை மாதம் 1-க்கு ரூ. 12 வீதம் வருடத்திற்கு ரூ. 144—0—0; கடைக்குக் காவல் கூலி, கொழிப்புக் கூலி, தீபச்செலவு, பாய், தராசு, படிக்கல் முத்திரை வைக்கக் கூலி, மற்றும் நியாயமான செலவுகள் குறைந்த பக்ஷம் வருடத்திற்கு ரூ. 60; தீபாவளிக்கும், தைப் பொங்கலுக்கும், A. C. T. O. ஆபீஸ் பியூன்கள், இன்கம் டாக்ஸ் ஆபீஸ் பியூன்கள், முனிசிபல் ஆபீஸ் பியூன்கள், தபால் ஆபீஸ்காரர்கள், போலீஸ்காரர்கள், இன்னும் அந்த ஊரில் எந்தெந்த விதமான கண்ட்ரோல் ஆபீசுகள் உள்ளனவோ அந்தந்த ஆபீஸ்களிலும் உள்ள பியூன்களுக்கு இனாம் கொடுப்பது ரூ. 40; ஆக மொத்தச் செலவு ரூ. 388—0—0 நீக்கி நிகர லாபமாகக் கிடைப்பது ரூ. 237—0—0. இதில் விற்பனை வரி என்டிமேட்டாகப் போவது ரூ. 108-ம் போக மீதமிருப்பது ரூ. 129—0—0 மட்டும்தான் ஒரு வருடத்திற்கு நிகர லாபம் ஆகிறது. இந்த விதமாகச் சில்லறை வியாபாரிகள் ஒடுக்கப்பட்டு மேற்படி வியாபாரம் பெரிய வியாபாரிகள் கைக்குப் போய்ச் சேருகின்றன.

சில்லறை வியாபாரிகளைக் கசக்கி பிழிந்து A. C. T. O.-க்களும். D. C. T. O.-க்களும் உயர்ந்த பதவிகளைப் பெறுகிறார்கள்.

இதேமாதிரி நிர்வாகம் இன்னும் நீடித்து நடப்பதற்கு இப்பொழுதுள்ள காங்கிரஸ் மந்திரி சபை உடந்தையாயிருக்குமேயானால் வருங்கால எலக்ஷன்களில் கம்யூனிஸ்ட் கட்சியார்களின் பிரசாரத்திற்கு ஏதுவாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

மதுபானத்தை ஒழிப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட வரி ஏழை மக்களின் வயிற்றில் அடிப்பதற்கு உபயோகப்பட வேண்டாம். இது விஷயத்தில் காங்கிரஸ் மந்திரிகள் கவனம் செலுத்திப் பரிகாரம் செய்வார்களா?

இப்படிக்கு,
ஒரு ஏழைச் சில்லறை வியாபாரி.

[நமக்குத் தோன்றவில்லை; அதாவது நமது காங்கிரஸ் மந்திரிகள் இப்பேர்ப்பட்ட சில்லறை விஷயங்களில் கவனம் செலுத்துவார்கள் என்று தோன்றவில்லை. தற்சமயம் உள்ள பெரிய உத்தியோகங்கள் போதாமல், ஜில்லாவுக்கு ஜில்லா புதிய ஜில்லா மாஜிஸ்ட்ரேட்டுகளையும் உதவி மாஜிஸ்ட்ரேட்டுகளையும் ஆயிரம் ரூபாய் ஐந்நூறு ரூபாய் சம்பளத்துடன் ஏற்படுத்துவதில் அவர்கள் கவனம் சென்றிருக்கிறது. இப்படிப் பல லட்ச ரூபாய் செலவுக்கு வழி செய்து கொண்டிருக்கும்போது உங்களுடைய தம்பிடிக் கணக்கை யார் கவனிக்கப் போகிறார்கள்? ஆயினும், ஒருவேளை அவர்கள் இந்தச் சில்லறை விஷயத்தில் கவனம் செலுத்துவதாயிருந்தால், அதற்கு நாம் தடையாயிருக்க வேண்டாமென்று தங்கள் கடிதத்தைப் பிரசுரித்திருக்கிறோம். —ஆசிரியர்.]

நற்சாட்சி

திவான்பகதூர் தினகர முதலியார் அவர்களுக்கு, பால்ட் அண்ட் கம்பெனியார் வணக்கத்துடன் எழுதிக் கொள்வது:

போன வாரம் நாங்கள் அனுப்பி யிருந்த தைலத்தை உபயோகித்துப் பூரண திருப்தி அடைந்திருப்பீர்க ளென்று நம்புகிறோம். தாங்கள் முன்பே தெரிவித்திருந்தபடி எங்களுக்கு ஒரு நற்சாட்சிப் பத்திரம் வழங்குமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகிறோம்.

நன்றியுள்ள,
பால்ட் அண்ட் கம்பெனியார்.

• • •

பால்ட் அண்ட் கம்பெனியாருக்கு:

உங்கள் தைலமும் நீங்களும் நாசமாய்ப் போக! 'ரோம வர்த்தினி' என்ற தைலம் அனுப்பச் சொன்னதற்கு அதே லேபிள் ஒட்டிய பாட்டிலில் 'ரோம நாசினி'யை நிரப்பி அனுப்பித் தொலைத்து விட்டீர்களே! அது என் தலையிலே ஒரு ரோமம் கூட இல்லாமல் மழுமழுவென்று சுத்தம் செய்து விட்டது! இப்படி அநியாயமாய் என் தலையை வழுக்கையாக்கிய உங்கள் எல்லோருக்கும் என் சாபம்! நீங்கள் மறுபடியும் நாசமாய்ப் போக! இங்ஙனம்,

தி. ப. தினகர முதலியார்.

• • •

தி. ப தி. முதலியார் அவர்களுக்கு:

தவறுதலுக்கு வருந்துகிறோம். அதோடு, தாங்கள் அளித்த நற்சாட்சிக்குப் பெரிதும் நன்றி பாராட்டுகிறோம்.

நன்றியுள்ள, பா. அ. க.

இந்தக் கடிதம் தி. ப. தி. முதலியாரவர்களைத் தூக்கி வாரிப் போட்டது! ஆனால் மறுதினம் அந்த 'நற்சாட்சி' பத்திரிகையில் பின்வருமாறு பிரசுரமா யிருந்ததைக் கண்டதும் அவர் மூர்ச்சையானார்.

"பால்ட் அண்ட் கம்பெனியாரின் 'ரோம நாசினி'யை உபயோகியுங்கள். உங்கள் அபிமானி திவான்பகதூர் தினகர முதலியார் எழுதுகிறார்: '...... ஒரு ரோமம் கூட இல்லாமல் மழுமழுவென்று சுத்தம் செய்து விட்டது....'—இதைப் போல ஆயிரக் கணக்கான நற்சாட்சிகள் வந்து குவிந்து கொண்டிருக்கின்றன!" —விநாயகன்.

தி இந்தியன் பாங்க் லிமிடெட்.

★

தலைமை ஆபீஸ்:
"இந்தியன் பாங்க் பில்டிங்ஸ்"
வடக்கு பீச் ரோடு, மதராஸ்

★

லோகல் ஆபீஸ்கள்:
எஸ்பிளனேட், திருவல்லிக்கேணி, மவுண்டு ரோடு, மயிலாப்பூர், தியாகராயநகர், புரசவாக்கம், எழும்பூர்.

சென்னை மாகாணத்தில் எல்லா முக்கியமான இடங்களிலும், பம்பாயிலும் பிராஞ்சுகளும் சப் ஆபீஸ்களும் உள்ளன.

★

வழங்கி வாக்களிக்கப்பட்ட
மூலதனம் ரூ. 68,71,800

செலுத்தப்பட்ட
மூலதனம் ரூ. 44,42,662

ரிஸர்வ் நிதி ரூ. 50,00,000

டெபாஸிட்டுகள்:
31-12-45 முடிய
ரூ. 13½ கோடிக்கு அதிகம்

★


சகலவிதமான பாங்க் அலுவல்களும் நடத்தப்படும். மற்ற விவரங்களுக்குப் பாங்கியின் எந்த ஆபீஸுக்காவது எழுதி தெரிந்து கொள்ளலாம்.

N. கோபால அய்யர்
செக்ரடரி.



Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
116-119, Sladens Garden, Poonamalle High Road, Kilpauk, Madras.

கல்கி



ALKI ஜூலை 21, 1946 4 அணா

Regd. No. M. 4392

